# விவிலிய வினாடி வினா
## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லில்லி இசபெல்லாமேரி OSM, குயின்மேரி CIC – மதுரை; ரோஸ்லினா மேரி OSM, மரிய லூசியாள் OSM, ரெஜினா மேரி FIHM – திருச்சி; பொலன்ஷியா OSM – நெல்லை; அடைக்கலமேரி CIC, எமரென்ஸ் மேரி OSM, மிரியம் CIC – திண்டுக்கல்; லூர்து மேரி CIC, மேரி செசாரியா SSAM, ஜூலி ME, ஹில்டா SJC, ஐசிந்த் SJC – சென்னை; ரொமானா OSM – நாகர்கோவில்; அல்போன்ஸ் - திருமங்கலம்; கரோலாமேரி OSM - தூத்துக்குடி; ஸ்விட்பெர்ட்டா மேரி OSM – தருவைக்குளம்; சிரோன் - திசையன்விளை; ஜெயமேரி CIC – ஆத்தூர்; ஜோசப்பிட்டா மேரி, மேரி எபிபானி FBC, ஜூலியானா FBS – தஞ்சாவூர்; கொன்சிலியா SJC – செய்யூர்; ரெய்மண்ட் SJC, சகாயராணி SJC - கடலூர்; லூர்துமேரி – கடப்பாக்கம்; மேரி விஜயா – கன்னியாகுமரி; மார்கிரேட் மேரி SJC – திண்டிவனம்; லோராமேரி – பிரகாசபுரம்; லில்லி சகாயம் OSM - பாண்டிச்சேரி.

**பொதுநிலையினர்**

லீமா தெரஸ், பாத்திமா, சந்தனம், ஜான் ஜோசப், கிளாரா லூர்துமேரி – திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா, அல்போன்ஸா ஜோதிமேரி, மார்கரேட் பெல்சியா, ஆரோக்கிய கிறஸ்டி அனிட்டா – திண்டுக்கல்; லூசியாள், பிரான்சிஸ் பேசில், பிரான்சிஸ் அலோசியஸ், ரீட்டா ஜோசப், சரோஜினி செசிலியா, வியாகுலமேரி, ஜெயசீலி சாமுவேல், சிலுவைக்கனி - சென்னை; வெர்ஜின் லூயிஸ் - திருநெல்வேலி; ஆண்டோ அவிவா - திருப்பத்தூர்; மரி அந்தோணி ராஜ் - முகையூர்; அலெக்ஸ்சாண்டிரியா – சிவகங்கை; தீபேஷ்வளன் இன்பராஜ், ஜனனி லொரேட்டோ, இராக்கினி முருகேசன் - மேல்வழி; மரியஜோசப், டெய்சி - மயிலாடுதுறை; டிடாகஸ் மேரி – கடியபட்டணம்.

குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**சகோ. குயின்மேரி CIC – மதுரை**

**லூசியாள் – சென்னை**

**Owned and Published by Fr. A. CHINNAPPARAJ, OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.**





## பதிப்பாசிரியர் பக்கம்



# தீர்மானம்

அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.,
ஜோதி மாதா ஆலயம், சென்னை.

**இறைஇயேசுவில் அன்புநிறை அன்னைமரி பக்தர்களே!**

புதிதாகப் புலர்ந்திருக்கும் இப்புத்தாண்டில் புதுப்பொலிவுடன் இங்கே உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாண்டு முழுவதும் இறையாசியை நீங்கள் அனைவரும் நிறைவாகப் பெற்று என்றும் மனநிறைவோடு வாழ வாழ்த்துகிறேன். ஒவ்வொரு ஆண்டும் நம் வாழ்வில் பல தாக்கங்களை விட்டுச் செல்கின்றன. இந்த தாக்கங்கள் நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கலாம். ஆனால் தாக்கங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் புதிய ஆண்டில் 'இதைச் செய்ய வேண்டும்' 'இதைச் செய்யக்கூடாது' என்று ஒருசில தீர்மானங்களை நம் வாழ்வில் மேற்கொள்வது இன்றும் வழக்கமாக இருந்து வருகின்றது.

கடந்த ஆண்டு நாம் எடுத்த தீர்மானங்கள் அத்தனையையும் அத்தனைபேரும் நிறைவேற்றினோமா என்றால் சந்தேகம்தான். ஆனாலும் முயற்சியைக் கைவிட்டுவிடாமல் தொடர்ந்து தீர்மானங்களை மேற்கொண்டு வாழ முயலுவது மனிதனின் இயல்பு. நம் அன்றாட வாழ்வின் கடமைகளிலிருந்து தவறாமல் இருக்க, ஒழுக்கமுள்ள வாழ்க்கையை வாழ, வாழ்க்கையில் முன்னேற்றம் காண என்று ஒருவன் தன்னைச்சுற்றி மட்டுமே எண்ணி இத்தகையத் தீர்மானங்களை மேற்கொள்கின்றான். ஆனால் ஒருசில நேரங்களில் இத்தகையத் தீர்மானங்கள் பிறரை மையப்படுத்தியும் அவர்கள் நலனில் அக்கறை கொண்டும் மேற்கொள்ளப்படுகிறது. இது பெரும்பாலும் அதிகார வர்க்கத்தில் இருக்கும் தலைவர்களால் தீர்மானிக்கப்படுகிறது.




மனுக்குல மாண்பு மரியா - 05
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 10
தூய ஆவியாரின் ஏவல் அன்னை மரியாள் - 12
நம்பினோர் கெடுவதில்லை - 15
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
வாழியவே! - 22
விவிலிய வினாவிடை - 24
திருத்தந்தையின் தேவ தாய்ச் சிந்தனைகள் - 26
ஜீவமாதவிடம் ஜீவன் வேண்டி - 31

எது எப்படியோ தீர்மானங்களை தீர்மானிப்பதில் குழப்பங்கள் வரலாம் ஆனால் ஒன்றை தீர்மானித்த பிறகு அதை நிறைவேற்றுவதில் முழு கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும். பல நேரங்களில் நாம் எடுக்கும் தீர்மானங்களை அனுதினமும் கடைபிடிப்பதற்கு சற்றுக் கடினமாக இருக்கும். ஆனால் இறுதிவரை எடுத்த முடிவில் (தீர்மானத்தில்) நிலைத்திருக்க அன்னைமரியா நம் அனைவருக்கும் ஒரு சிறந்த முன்னோடியாகத் திகழ்கின்றார்.

வானவனின் அறிவிப்பில் தான் இறைவனின் தாயாக இருக்கப்போவதை எண்ணி ஒரு நிமிடம் செய்வதறியாது திகைத்து நிற்கிறார் அன்னைமரியா. ஆனால் அந்த திகைப்பிற்குப்பின் ஒரு தீர்க்கமான தீர்மானம் எடுத்து அதற்கு தம் ‘அப்படியே ஆகட்டும்’ என்ற மாபெரும் பதிலைத் தந்து இறைவனின் திட்டத்திற்கு இசைகின்றார். இந்த தீர்மானத்தில் எத்தனை அவமானங்கள்! எத்தனை இன்னல்கள், இடையூறுகள்! எத்தனை துன்பங்கள், துயரங்கள்! இவையனைத்தையும் தம் வாழ்வில் அவர் சந்தித்தாலும் ஒருபோதும் சோர்வடையாது இறைத்திட்டத்திற்கு ஒத்துழைக்கும் தீர்மானத்தில் பின்வாங்கவேயில்லை. ஆகவேதான் அவருக்கு ‘இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்’ (லூக் 1:48) என்ற உன்னதமான எவருக்கும் கிடைத்திடாத பெருமை அவரை வந்தடைகின்றது.

நாம் எத்தகையத் தீர்மானங்களை நம் வாழ்வில் மேற்கொண்டாலும் இறைவனின் துணையின்றி நாம் அவற்றில் வெற்றிகொள்ள இயலாது என்பதை நாம் அனுதினமும் இடைவிடாமல் செபிக்கும் செபத்தில் ‘உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக’ (மத் 6:10) என்பதில் வெளிப்படுகின்றது. நம் திட்டம் இறைத்திட்டத்தோடு ஒத்திருக்கின்ற வேளையில் அது நிகழும்; இல்லையெனில் நாமெடுக்கும் முயற்சிகள் வீணானதே. மேலும் ‘மனிதர் தம் வழியை (திட்டத்தை) வகுத்தமைக்கின்றார்; ஆனால் அதில் அவரை வழிநடத்துபவரோ ஆண்டவர்’ (நீமொ 16:9) என்று நாம் விவிலியத்தில் வாசிப்பதன் அர்த்தம் நம் அனைவரின் திட்டத்தையும் ஆய்ந்தறிந்த இறைவனே அதற்கு வெற்றியைத்தர இயலும் என்பதாகும்.

என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே! (திபா 119:105) என்பதற்கிணங்க இறைவன்தான் நம் வாழ்வின் அனைத்தும். நாம் எவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டாலும் இறையாசி நமக்கு மிகவும் அவசியமானதொன்றாக இருக்கின்றது. ஆகவே புலர்ந்திருக்கும் இப்புத்தாண்டில் இறையாசி நம் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்க செபிப்போம்.

புத்தாண்டு தீர்மானங்கள் என்று நாம் எடுக்கும் அனைத்து முடிவுகளிலும் அன்னைமரியைப் போன்று வாழ்வில் எது வந்தாலும் தீர்க்கமாக இறைவனின் துணைகொண்டு வெற்றி காண முயற்சிப்போம். அன்னைமரியா தொடர்ந்து இறைவனிடத்தில் இடைவிடாது மன்றாடி நம் அனைவருக்கும் தேவையான வரங்களைப் பெற்றுத்தருவாராக! இறையாசியின் துணையோடு இப்புத்தாண்டுத் தீர்மானங்களை நிறைவேற்றி வாழ்வில் வெற்றி பெற வாழ்த்துக்களும், செபங்களும்!





**8. அன்னையின் அருளை தங்கள் வாழ்வில் பெற்றவர்கள்**

- **சாமந்தி – துரைப்பாக்கம், சென்னை:** என் அண்ணன் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டான். அன்னையின் அருளால் இப்போது நல்லபடியாக குணமடைந்ததற்கு நன்றி.
- **அல்போன்சா – வெட்டுவாங்கேணி, சென்னை:** என் பையனுக்கு தலையில் இரும்பு கம்பி விழுந்துவிட்டது. மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று கூறினார்கள். ஆனால் அறுவை சிகிச்சையின்றி அன்னையின் அருளால் குணம் அடைந்ததற்கு நன்றி.
- **திலகவதி - வெட்டுவாங்கேணி, சென்னை:** என் அக்காவின் கருப்பையிலிருந்த கட்டி அற்புதமான முறையில் குணமடைந்ததற்கு நன்றி.
- **சுமதி – பாண்டிச்சேரி:** அன்னையின் அருளால் வீட்டில் இருந்த பிரச்சனை நீங்கி சமாதானத்தோடு வாழ்கிறோம்.

இவர்கள் அனைவரும் ஜீவமாதாவுக்கு நன்றிகளை உரித்தாக்குகின்றார்கள். இயேசுவுக்கேப் புகழ்! மரியே வாழ்க!

## மகப்பேறு வேண்டி ஜெபம்

அதிசயங்களையும் அற்புதங்களையும் அன்றாடம் நிகழ்த்தும் எம் இறைவா, வாழ்வின் ஊற்றும் தொடக்கமும் நீரே. மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தீர். திருமணத்தினால் குடும்பமாக வாழ அவர்களை இணைத்தீர். நீர் எம்மீது வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாடாகவும், தம்பதியர் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பின் அடையாளமாகவும் குடும்பங்களைக் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கின்றீர். குழந்தையின்றித் தவித்த அன்னாள், எலிசபெத் ஆகியோரின் மீது மனமிரங்கி, அவர்களுக்குக் குழந்தை வரம் தந்தீர். அதுபோல, இன்று குழந்தையின்றித் தவிக்கும் தம்பதியர் ஒவ்வொருவர் மீதும் உமது கருணையைப் பொழியுமாறு நாங்கள் உம்மை வேண்டுகின்றோம். இறைவா, உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை நாங்கள் விசுவசிக்கின்றோம். இறந்த உடலுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றலும், வறண்ட நிலத்தை வளப்படுத்தும் வல்லமையும் நிறைந்தவர் நீர். எம் தாய் ஜீவ மாதாவின் பரிந்துரையின் வழியாக, குழந்தைப் பாக்கியம் வேண்டி நம்பிக்கையோடு உம் திருமுன் நிற்கும் இத்தம்பதியர் மீது மனமிரங்கி இவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் தந்து ஆசீர்வதித்தருளும். உமது அருளால் இவர்கள் பெறும் குழந்தைகளைத் தெய்வ பயத்திலும், ஞானத்திலும், விசுவாசத்திலும், நற்பண்பிலும் வளர்க்கத் தேவையான ஆற்றலையும் அருளையும் தருவீராக. இதனால் நாங்கள் என்றும் உமக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து உம்மை மகிமைப்படுத்துவோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**3. கவிதா - சென்னை**

எனக்குத் திருமணமாகி இரண்டு ஆண்டுகளாகியும் குழந்தையில்லை. ஒவ்வொரு மாதமும் இடைவிடாமல் நம்பிக்கையோடு இங்கு வந்து வளையல்களை வாங்கிச் சென்று செபிப்பேன். மருத்துவர்கள் அனைவரும் என்னை கைவிட்டுவிட்ட நிலையில் தாயின் பாதத்தை இறுகப்பற்றிக்கொண்டு கண்ணீரோடு செபிப்பேன். எனது நம்பிக்கை வீன்போகவில்லை. எனக்கு ஒரு அழகிய ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்திருக்கின்றார். குழந்தை பாக்கியம் தரும் ஜீவமாதாவுக்கு நன்றிகள்.

**4. ரெபெக்கா, அலெக்ஸ் – செங்கல்பட்டு**

எனக்குத் திருமணமாகி இரண்டு வருடங்கள் முடிந்த நிலையில் குழந்தையில்லாமல் இருந்தேன். வீட்டிலும் சமுதாயத்திலும் பல இழிவானப் பேச்சுக்கள். ஒரு நிம்மதியில்லா வாழ்க்கையை வாழ்ந்து வந்தேன். இந்நிலையில் எனக்குத் தெரிந்த ஒரு சகோதரி இந்த ஆலயத்தைப்பற்றிக் கூறி சென்று வரச் சொன்னார்கள். நானும் நம்பிக்கையோடு வந்து மன்றாடினேன். இங்கு வந்து சென்ற இரண்டு மாதத்திலே நான் கருவுற்றேன். எனக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. இப்போது குழந்தைக்கு இரண்டு வயது ஆகிறது. இப்போதுதான் சாட்சி சொல்ல இங்கு வந்திருக்கிறேன். ஜீவமாதாவுக்கு கோடி நன்றிகள்.

**5. ஊமையம்மாள் - சென்னை**

நான் ஒரு இந்து மதத்தைச் சார்ந்த சகோதரி. எனக்குத் திருமணமாகி இரண்டு வருடங்களாகியும் குழந்தையில்லை. என் கஷ்டங்களை பிறரிடம் சொல்லி அழுவது என் வழக்கம். அவ்வாறு அழும்போது ஒரு சகோதரி எனக்கு இந்த ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வளையல்களை என்னிடம் கொடுத்து செபிக்கச் சொன்னார்கள். அந்த வளையல்களை அணிந்து அவர் சொல்லிக்கொடுத்தவாறே செபித்தேன். எனக்கு ஒரு அழகியப் பெண் குழந்தை பிறந்திருக்கின்றது. என் வேதனைகளையெல்லாம் நீக்கிய இறைவனுக்கு நன்றி.

**6. சாம்ளா தேவி, கல்யாண குமார்**

எனக்குத் திருமணமாகி 9 வருடங்களாகிறது ஆனால் குழந்தை பாக்கியம் இல்லை. ஒவ்வொரு மாதமும் அன்னையின் ஆலயத்திற்கு வந்து செபித்து செல்வது வழக்கம். சென்ற ஆண்டு ஜீவமாதவின் திருவிழாவின்போது டிசம்பர் மாதம் இங்கு வந்து அன்னையின் திருத்தேரைத் தோளில் சுமந்து சென்று என் வேண்டுதலை செலுத்தினேன். அன்னையின் வேண்டுதலால் எனக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. இதோ அந்தக் குழந்தை. நம்பிக்கையோடு இந்த ஆலயத்திற்கு வருபவர்கள் நிச்சயம் இறையருளை நிறைவாகப் பெறுவார்கள். ஜீவமாதவுக்கு நன்றி. மரியே வாழ்க!

**7. ரோஸ்விட்டா – தாம்பரம், சென்னை**

என் மகளுக்குத் திருமணமாகிப் பல வருடங்களாகியும் குழந்தை இல்லாமல் இருந்தாள். அவள் வெளிநாட்டில் இருப்பதால் அவள் போட்டோவை அன்னையின் பாதத்தில் வைத்து செபித்தோம். இறைவனின் அருளால் இப்போது என் மகள் 5 மாத கர்ப்பிணியாக இருக்கின்றாள். அவர்கள் இந்தியாவிற்கு வரும்போது இங்கு வந்து சாட்சி சொல்வார்கள். ஜீவமாதாவுக்கு நன்றிகள்.







# மனுக்குல மாண்பு மரியா

24

அருள்பணி. ஜான் ரொன்காலி ம.ஊ.ச.
ஜெகன் மாதா பிரையரி, திருச்சி.

## மனுக்குல மாண்பு மரியாள் – அழகின் முழுமை

அழகியதும் நல்லதும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை. இவை இறைவார்த்தையுடன் ஒத்துப்போவதால் அழகு. மட்டுமல்ல, இதமானது, விருப்பமானது, அன்புசெய்யக்கூடியது அழகு. விவிலியத்தில், ஆண்டவர் தான் படைத்த அனைத்தையும் **நல்லது** எனக்கண்டார். ஆனால் மனிதனைப் படைத்தபின்போ **மிகமிக நல்லது** எனக்கண்டார் (தொநூ. 1:31) எனப்பார்க்கின்றோம்.

ஏதேன் தோட்டத்தில் இறைவன், ஆணும் பெண்ணுமாக மனிதனைப் படைத்தபின் உற்று நோக்குகையில், அவன் மிகமிக அழகாக இருப்பதாகக் காண்கிறார். ஆக இறைவனுடைய ஆவியையும் வார்த்தையையும் பெறுபவர் அழகுக்குள் அழகு சேர்ப்பவராகிறார்.

ஆண்டவர் அனைத்தையும் 'உண்டாகட்டும்' என்று சொன்னார், அப்படியே உண்டானது (7 முறை). நல்லதும் அழகியதும் எப்போதும் கைகோர்த்துக்கொண்டேதான் செல்லும். ஏனெனில் நன்மைத்தனமும் அழகும் எப்போதுமே இணைந்து செல்லவேண்டியவை. இறைத்திட்டத்தை, இனிமையை வெளிப்படுத்துவது எதுவாயினும் அது அழகே. அங்கேதான் இறைவனே நடனமாடுகிறான். இந்த வகையில் இறைத்திட்டத்தினை தங்கள் பாணியில் வெளிப்படுத்தி சான்று பகர்ந்திருக்கும் பாத்திரங்களை சிரிது அலசுவது சாலப்பொருந்தும்.

## இறைவன் படைத்த இயற்கை அழகு

விவிலியத்தின் தொடக்க நூலின் முதல் அதிகாரம் இறைவன் உயிரினங்கள் பலவோடு இயற்கையைப் படைத்த பெருமைகளை வர்ணிக்கின்றது. ஒளியையும் இருளையும் பிரித்தது முதல் (1:3) மனுக்குலத்தின் முதல் ஜோடியை உருவாக்கியது வரை (1:30) அழகிய விவரிப்பு இது. இந்த படைப்பின் நிகழ்ச்சியில் இரண்டு கருத்துக்கள் தெளிவாகத் தெரிகின்றன. முதலாவதாக இறைவனின் வார்த்தையும் இயற்கையை நெறிப்படுத்தும் அதன் செயல்பாடும் வெளிப்படுகின்றன. இறைவன் "ஒளி உண்டாகுக" என்றார். ஒளி உண்டாயிற்று (1:3). இது போல பத்து முறை இறைவனின் கட்டளை செயல்பட்டதாக விவிலியத்திலே பார்க்கிறோம் (தொநூ. 1:3, 6, 9, 11, 14, 20, 24, 26, 28, 30). மேலும் ஏழு முறை "அது அப்படியே நிகழ்ந்தது" என்று, இறைவார்த்தையின் வல்லமையும் பலனும் பற்றி குறிக்கப்படுகின்றது (தொநூ 1:3, 7, 9, 11, 15, 24, 30).

இரண்டாவதாக, ஒவ்வொன்றையும் உருவாக்கிய பின்பு தான் படைத்தவற்றைக் கனிவுடன் நோக்கிய இறைவன், அவையனைத்தும் "நன்றாயிருக்கின்றன" (ஏழுமுறை) என்று கண்டார். அதிலும் இந்த அவருடைய

பார்வையின் அழுத்தம் அதிகரித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். முதல் ஆறு முறையும் தான் படைத்தவை ஒவ்வொன்றும் நன்றாயிருப்பதாக சாதாரணமாக கணித்த இறைவன், ஏழாவது முறை தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கி, “அவை மிகவும் நன்றாயிருந்தன!!!” என்று கண்டார் (31). இறைவனின் இந்த மகிழ்ச்சியும், திருப்தியும் இயற்கையானது, இறைக்குரலுக்குக் கீழ்ப்படிந்ததனால் விளைந்த நன்மைக்கும் இனிமைக்கும் மிகப் பெரிய சான்று. இறைவன் தனது படைப்பில் தான் நன்றாயிருப்பதாகக் கண்டவை, உண்மையில் அவை அழகாயிருந்தன என்பதால்தான். ஆக அழகும் நன்மையும் ஒன்றுக்கொன்று ஆழ்ந்த தொடர்புடையவை என்பதில் மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

இயற்கை ஏன் அழகாயிருக்கின்றது என்பது பலரது தீர்க்கமுடியாத கேள்வி. விவிலியம் இதற்கு அழகான பதிலை உணர்த்துகின்றது.

## ஏவாளின் அழகு

இஸ்ராயேலின் தாய்மார்களில் முதல்வி இவள். ஏவாளைப் பார்த்து மக்களினம் தன்னைக் கண்டுகொள்ள முடியும். ஆண்டவர் பெண்ணை உருவாக்கி, ஆதாமிடம் அழைத்துக்கொண்டுவந்து அவளை அவனுக்குக் கொடுக்கின்றார். அவன் நிறைவு காண்கிறான். ஆக, நிறைவு தருவது அழகு. அவள் இறைவனின் வார்த்தையைக்கேட்டு அதனை ஏற்றுக்கொண்டதால் அழகுபெற்றாள். அதே வேளையில், அவள் பாம்பின் குரலையும்கேட்டு பணிந்ததால், தன்னோடு தன் பிள்ளைகளின் அழகையும் அசிங்கப்படுத்திக் கொண்டாள். தன்னிலை தவறிய ஏவாளினால் அவளது அழகு மட்டுமல்ல, இந்த அவனியின் அழகும் கூட சீரழிந்தது. ஆனால் அவளது வழித்தோன்றலான இஸ்ராயேல், இறைத்திட்டத்தின்படி, இறைச்சட்டத்தின்படி வாழ்ந்தபோது தன் நிலை புதுப்பிக்கப்பெற்று மிகமிக அழகியவளாக மாறினாள் (தொநூ. 2:22).

## இஸ்ராயேலின் அழகு

தோராவுக்கு விசுவாசமாயிருக்கும் உடன்படிக்கையின் மக்களாக இருக்கும்வரை இஸ்ராயேலும் அழகுதான். சீனாய் மலையில் இறைவன் திருச்சட்டத்தை வழங்குமுன் அங்கே குறைகளோடிருந்த மக்களையெல்லாம் மோசே குணப்படுத்தினார் (விப. 19:24). ஆக நிம்மதியும் மகிழ்வும் உள்ள இடமே ஆனந்தமுள்ள இடம். இறைவனின் கண்முன் இஸ்ராயேல் நிறையழகுள்ள மணப்பெண் போன்றிருந்தாள். (இபா. 2:14). அன்போடு இறைவனின் நியதிகளைக்கேட்ட இஸ்ராயேல், மாபெரும் அழகியாகத் தெரிந்தாள். சீனாய் மலையில் மோயீசன் மக்களுக்குத் திருச்சட்டத்தைக் கொடுத்து, அதனை இஸ்ராயேல் மக்கள் ஏற்றுக்கொண்டபோது தனி அழகு பெற்றாள். *‘ஆண்டவர் சொன்ன அனைத்தையும் நாங்கள் செய்வோம்’*. (விப. 24:7) போதுமான பொது நியதிகளின்றி மக்களினம் முழுமையானதாக இருக்கமுடியாது. எனவே முழுமைப்படுத்துவது அழகு.

ஏவாள் பாம்பின் குரல் கேட்டாள், இஸ்ராயேல் இறைவனின் குரல் கேட்டாள். (இது தவிர உன்னத சங்கீதத்தில் இஸ்ராயேலின் அழகினை உருவகமாகக் காணலாம்).

## இயேசுவின் அழகு

தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில்தான் இயேசுவின் அழகு இருக்கின்றது. (யோவான் 4:34... 8:28) இவரே என் அன்பு மகன், இவருக்குச் செவிசாயுங்கள் (மத் 17:5, லூக் 9:35.) இயேசு, நல்லாயன். தனது உயிரைத் தனது ஆடுகளுக்காகத் தருகின்றார். இவர் தந்த நல்ல ரசம், இவர் பகிர்ந்த பாசமான







# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



அருள்பணி. ஸ்டீபன்ராஜ்
ம. ஊ. ச.
சென்னை

**‘நீர் நினைப்பது கைகூடும்; உம் வழிகள் ஒளிமயமாகும்’ (யோபு 22:28).**

அன்புக்குரிய ஜீவமாதாவின் பக்தர்களே! டிசம்பர் மாதம் முதல் நாள் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவின் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு முன்பாக இரண்டு நாட்கள் கொடியேற்றமும் நவநாள் திருப்பலியும் அனுசரிக்கப்பட்டது. இறுதி நாளாகிய அன்று அன்னைக்குத் திருத்தேர் எடுத்து சிறப்பாக விழாக் கொண்டாடப்பட்டது. ஏராளமான பக்தர்கள் அன்று அலைகடலெனத் திரண்டு வந்து இறையாசியை அன்னையின் வழியாகப் பெற்றுச்சென்றனர். ஜீவ அன்னையின் உருவம் தாங்கிய திருத்தேரை குழந்தை வரத்திற்காக ஏங்கி நிற்கும் பெண்கள் அனைவரும் இணைந்து சுமந்து சென்றார்கள். அன்றைய தினம் பலர் வந்து சாட்சியங்களைப் பகிர்ந்துகொண்டார்கள். இவர்களது சாட்சியப்பகிர்வு கேட்கின்ற அனைவரையும் நெகிழவும் மெய்சிலிர்க்கவும் வைத்தது. அந்த சாட்சியங்களில் ஒருசில இதோ உங்கள் பார்வைக்கு.

**1. பிரான்சிஸ்கா – சென்னை**

நான் இரண்டாம் முறையாக கருவுற்றிருந்தேன். திடீரென்று என் முகம், கை, கால் என்று உடல் முழுவதும் வீங்கியது. மருத்துவரிடம் சென்றபோது கருப்பையில் பிரச்சனை இருக்கின்றது என்றும் ஏதாவது ஒரு உயிரைத்தான் தங்களால் காப்பாற்ற முடியும் என்றும் சொன்னார்கள். வேதனை தாங்க முடியாமல் கண்ணீர் விட்டுக் கதறி அழுதேன். ஜீவமாதவிடம் உயிர்பிச்சை கேட்டேன். அன்னை எங்கள் வேண்டுதலைக் கேட்டு எங்கள் இருவரையும் நல்லபடியாக வாழச் செய்தருளியிருக்கிறார். ஜீவனை எங்களுக்கு அளித்த ஜீவமாதாவுக்கு நன்றிகள்!

**2. சகாயராணி – சென்னை**

என் முதல் பெண்ணுக்கு மிகவும் கஷ்டப்பட்டுத் திருமணத்தை நடத்தினோம். அவள் முதலில் கருவுற்றாள் ஆனால் அந்த கரு கலைந்துவிட்டது. ஜீவமாதாவின் பரிந்துரையால் மீண்டுமாக அவள் கருவுற்றாள் ஆனால் 7ம் மாதத்தில் குழந்தை எந்தவொரு அசைவுமின்றி இருந்தது. மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு குழந்தை பிழைப்பதற்கு மிகவும் கடினம் என்று கூறினார்கள். ஜீவமாதாவிடம் கண்ணீரோடு முழந்தாளிட்டு செபித்தோம். இப்போது ஒரு அழகான ஆண் குழந்தையை இறைவன் எங்களுக்கு அருளினார். எங்கள் குடும்பத்தை ஆசிர்வதித்த ஜீவமாதாவுக்கு நன்றி.

# "அப்படியே ஆகட்டும்" மாத இதழின் வளர்ச்சிக்காக நன்கொடை வழங்கியவர்கள்

| பெயர் | ஊர் | தொகை |
|---|---|---|
| செசிலியா | சென்னை | ரூ. 500 |
| இந்திரா சஞ்சீவி | சென்னை | ரூ. 500 |
| பிரீத்தி செரியன் | சென்னை | ரூ. 500 |
| நவீன் குமார் | சென்னை | ரூ. 500 |
| சந்தோஷ்குமார் | சென்னை | ரூ. 500 |
| சைமன் சிவா | சென்னை | ரூ. 500 |

நன்கொடை வழங்கிய தாராள உள்ளங்களுக்கு நன்றி.
இறைவன் உங்கள் உள்ளத்தையும் இல்லத்தையும் ஆசிர்வதிக்க வாழ்த்துகளும் செபங்களும்.

**அன்பார்ந்த வாசகர்களே! உங்களது ஆண்டு சந்தாவையும், நன்கொடையையும் அனுப்ப வேண்டிய முகவரி**

**"அப்படியே ஆகட்டும்"**
**ஜோதி மாதா ஆலயம்**
**5/301, மாதா கோயில் தெரு,**
**ஒக்கியம்பேட்டை, சென்னை - 97**

**Bank Details**

**NAME: APPADIYE AGATTUM**
**NEFT: A/C No. 0683073000000080**
**IFSC: SIBL0000683**
**South Indian Bank, Sholinganallur**
**Pl.Call & Confirm: 8680860308**







வார்த்தைகள், இவர் செய்த செயல்கள் அனைத்துமே நல்லவை, நன்மை தந்தவை. இவரது செயல்கள் நல்லவை. ஏனெனில் அவை தந்தையின் அன்பை வெளிப்படுத்தின. இயேசுவில் தந்தையின் முகம் விளங்கியது என யோவன் விளம்புகிறார் (யோவான் 14:9).

சிலுவையில் இயேசு மிகமிக அழகானவராகக் காணப்பட்டார், ஏனெனில் அன்பின்காரணமாகத் தன் உயிரைப் பலியாக்கினார். மன்னித்தார். தன்னவர்கள் சிதறிப்போக இவர் விரும்பவில்லை (ஒற்றுமை) (எசா 53:2–3 அவரிடம் அழகோ உருவோ இல்லை). ஆனால் சிதைக்கப்பட்ட இந்த அழகு உயிர்ப்பினால் மகிமையடையும். உண்மையிலேயே அதிக அழகுள்ளவர் இயேசுவே. ஏனெனில் இவர் வாழ்வு தரும் வல்லவரின் வார்த்தை. இந்த வார்த்தையே மனுவாகி மனிதர் மத்தியில் குடிகொண்டது.

## திருஅவையின் அழகு

2கொரி 11:3, உரோமை 16:20, எபே 5:26–27 இவை மூன்றும் திரு அவையின் அழகுக்கு உதாரணங்கள். திவெ. 12:21 ம் இதையே உணர்த்துகின்றது.

நற்செய்தியின் ஒழுங்கின்படி வாழ்கின்றபோது திருஅவை அழகாயிருக்கின்றது. வீழ்ச்சிக்கு முன்னிருந்த ஏவாளைப்போல திருஅவை அழகியவள் (வார்த்தைக்குப் பணிந்திருக்கும்போது அழகு).

கொரிந்து நகரத் திரு அவை, மாசற்றதும் புனிதமானதுமாக மணமகன் கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட வேண்டும். ஆனால் அது ஏவாளைப்போல குழம்பிய நிலையில் இருந்ததாக பவுல் அடிகளார் சொல்லுகிறார் (2கொரி 11:3).

உரோமைத் திருஅவையின் அழகு. உரோமை 16:20. இங்கும் ஆபத்துக்கள் உண்டு. போலிப்போதகர்கள் உண்டு.

எபேசுத் திருஅவை எபே 5:25–27 ஆதாமும் ஏவாளும் கிறிஸ்து திருஅவை எனும் தம்பதிகளுக்கு முன்னுதாரணம். (கிறிஸ்து திருஅவையை அன்பு செய்வதுபோல, கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் அன்பு செய்யப் பணிக்கின்றார் பவுல் அடிகளார். ஆண்டவர் ஏவாளை ஆதாமுக்கு அளித்தது போல, கிறிஸ்து தன் திருஅவையை உலகிற்கு அளிக்கின்றார். இந்தப் புனித, தூய்மையான வாழ்வுக்கு வழிநடத்துவது யார்? தூய ஆவி.

## மகிமையில் விளங்கும் அகில திருஅவை

திவெ. 12:1 இந்தப் பெண்ணுக்கு ஒரு பெயர் இல்லை. ஏதேனில் ஏவாளை நினைக்க வைக்கிறாள். ஏதேனில் பெண்ணுக்கும், பெண்ணின் வாரிசுக்கும் பாம்புக்குமிடையே பகையை உண்டாக்கினார் இறைவன் (தொநூ. 3:15). திருவெளிப்பாட்டின் மாபெரும் அடையாளத்தில் பழைய பாம்பும், பெண்ணும் அவளது பிறக்கவிருக்கும் குழந்தையும், அவர்களிருவருக்குமிடையே போராட்டமும்

வர்ணிக்கப்படுகின்றன (திவெ. 12:9). அவளது எஞ்சிய வாரிசுகளுக்கும், இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடிப்போருக்கும், இயேசுவுக்குச் சாட்சிபகர்வோருக்கும் எதிராக நாகம் போர் தொடுத்தது (17).

இந்தப் பெண் மக்களினம் அனைத்தையும் இறைமக்களையும் தன்னிலே அடக்கியவள். 12 இஸ்ராயேல் கோத்திரங்களையும், செம்மறியின் 12 திருத்தூதர்களையும் ஒன்றிணைக்கிறாள். 12 விண்மீன்கள் கொண்ட முடி சூடியிருக்கிறாள். ஆதியாகமத்தில் காணும் அழகியப் பெண்ணை இந்தப் பெண் நினைவுபடுத்துவதோடு, இறைமக்கள் எனும் மகிமையின் மக்களையும் நினைவூட்டுகிறாள்.

ஏவாள் ஆதாமின் மணமகள். திருஅவை இயேசுவின் மணமகள். புதிய எருசலேம் ஆண்டவரின் தோட்டமாகக் கணிக்கப்பட்டது (திவெ. 2:7). திருவெளிப்பாட்டின் பெண்மணி தனது மணவாளனாகிய செம்மறி கிறிஸ்துவுக்காக அழகுபடுத்தப்பட்டிருக்கிறாள் (21:7–9). ஏவாள் இறைவனால் உருவாக்கப்பட்டதுபோலவே கிறிஸ்துவின் மணமகளாகிய புதிய எருசலேமும் புதிய படைப்பானாள். இவள் இறைவனிடமிருந்து இறங்குகிறாள் (திவெ. 21:2) இவளது உடைகள் ஒளி வீசின. நமக்காகப் பலியான கிறிஸ்துவின் இரத்தத்தினால் தோய்க்கப்பட்டவை. செம்மறியின் இரத்தத்தில் நீதிமான்கள் தங்கள் உடைகளைத் தோய்த்துக் கொண்டார்கள். (7:13–14). இப்படியாக இறைவன் தனது திருஅவையை உடுத்திக்கொண்டிருக்கிறார் (12:1. மத் 5:45). ஆவியானவர் என்ன சொல்கிறார்?

செம்மறியின் வார்த்தையை ஏற்று கடைப்பிடிக்க வேண்டுமெனவும், ஆடைகளைக் கறைபடியாது காத்திடவும் சொல்கிறார். இறைவனின் குரல் கேட்டு நடப்பதில் விசுவாசமாயிருப்பவன் அழகியவன், நல்லவன். யார் மணமகளை அழகியவளாக, மணமகனுக்கு ஏற்றவளாக அழைத்துவந்து அளிக்க முடியும்? ஏதேனில் **படைத்தவரே**, தன் மகன் ஆதாமுக்கு மகள் ஏவாளைக் கொடையாகக் கொடுக்கிறார். (2:22). சீனாயில் **மோயீசன்** இஸ்ராயேலை இறைவன்முன் நிறுத்துகிறார்.( விப. 19:7,10–14,17). நாசரேத்தில் **கபிரியேல்** மரியாளை நிறுத்துகிறார் (லூக் 1:26–38).

**ஸ்நாபக அருளப்பர்** மணமகனின் நண்பராக தன் சீடர்களின் அன்புக்குழுவை தன் மணத்தோழன் இயேசுவுக்குக் கொடுக்கின்றார் (அவர் வளரவேண்டும் நான் குறையவேண்டும்).

**பவுல் அடிகளார்** தான் கண்டுபிடித்த கொரிந்து திருஅவையை, கிறிஸ்துவுக்கு ஏற்றதொன்றாக அர்ப்பணிக்க விழைகின்றார் (2கொரி 11:2). **கிறிஸ்து** மணமகன், மகிமைத் திருஅவை மணமகள். ஏதேன் மணமண்டபம், புதிய காலத்தில் இது புதிய எருசலேம் (திவெ. 2:7).

## மரியாளின் அழகு

அழகு என்பது இறைவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில்தான் இருக்கின்றது. எனவே மரியாள்தான் உண்மையில் அழகானவள் (லூக் 1:38). மங்கள அறிவிப்பின்போது மரியாளின் அழகு அவளது **ஆகட்டும்** என்ற பணிவிலிருக்கின்றது. உடன்படிக்கையின் ஆண்டவருக்கு ஆகட்டுமெனப் பணிந்தாள். சீனாயில் மென்மையானவளாக இஸ்ராயேலில் இருந்ததைப்போலவே, நாசரேத்தில் மரியாள் இருந்தாள்.

மரியாள் அருள் நிறைந்தவள், ஆசீர்வதிக்கப்பட்டவள், பெண்களிலே பேறுபெற்றவள். ஆண்டவரின் வார்த்தையைத் தன் கருவிலே தாங்குவதற்காக தனிப்பட்டவிதமாகக் காக்கப்பட்டவள், தன் பணிவினால், அழகின் முழுமையானவள்.





எதிரானதாக இருந்தாலும், அவைகள் அவள் உடலளவில் மட்டுமல்லாமல் ஆன்மீக அளவிலும் வாழ்ந்த அவளுடைய தாய்மையின் மாண்பு மற்றும் கடவுளுடைய வார்த்தையை நிறைவேற்றுவதில் அவளுடைய நம்பகத்தன்மையைப் புகழ்ந்து பேசுகின்றது.

மறைமுகமான இந்தப் புகழ்ச்சியின்வழியாக, இயேசு ஒரு குறிப்பிடத்தக்க முறையைப் பயன்படுத்துகிறார், பொதுவான வாக்குமூலங்களின் வழியாக இயேசு மரியாளுடைய நடத்தையில் உள்ளதொரு பெருந்தன்மை மற்றும் புனிதத்திற்கான வழியில் மனுக்குலத்தோடு அவளுக்குள்ள நெருக்கத்தையும் உடனிருப்பையும் மிகத்தெளிவாகக் காட்டுகின்றார்.

இறுதியாக, இயேசுவினுடைய தாயை ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று அழைத்த அந்தப் பெண்ணுக்கான இயேசுவினுடைய பதிலாக அமைந்த 'இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்' (லூக் 11,28) என்ற வார்த்தைகள் மரியாளுடைய தனித்தன்மையைச் சந்தேகிக்காமல் கடவுளுடைய வார்த்தையை நிறைவேற்றுவதில் அவளிடமிருந்த நம்பகத்தன்மையைக் காட்டுகின்றது. திருஅவையும் இதை நன்கு புரிந்துகொண்டு, மரியாளைப் பெருமைப்படுத்தும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் இந்த இறைவார்த்தையை வைத்திருக்கின்றது. உண்மையில் அந்த நற்செய்தி வாசகமானது மரியாளின் ஆசீர்வதிக்கபட்ட நிலையையும் கடவுளோடு அவளுக்கிருந்த நெருக்கமான உறவையும் மற்றும் கடவுளுடைய வார்த்தைக்கான அவளுடைய முழுமையான அர்ப்பணத்தில் இருப்பதையும் மிகத்தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றது.

## மரியாள் முற்றிலும் கடவுளுக்குரியவளாக இருந்தாள்

5. "முற்றிலும் புனிதமானவளுக்கு" கடவுளால் சிறப்புச் சலுகையாக வழங்கப்பட்ட அருளினால் (grace), அவளுடைய வாழ்வில் அவள் பெற்றுக்கொண்ட அற்புதங்களை நினைத்து நம்மை வியக்க வைக்கிறது. மேலும், இது மரியாள் எப்பொழுதும் முற்றிலும் கடவுளுக்குரியவள் என்றும், அந்த நிலையானது (எந்தவொரு குறையும் இல்லாத நிலை), கடவுளுடனான முழுமையான இணக்க நிலையில் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதையும் நமக்கு நினைவூட்டுகின்றது.

ஆகவே, அவளுடைய பூவுலக வாழ்வானது விசுவாசத்தில், நம்பிக்கையில் மற்றும் அன்பில் நீடித்த மற்றும் உயர்ந்ததொரு வளர்ச்சியால் குறிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு, இறை இரக்கத்தின் பிரதிபலிப்பாக, புனிதத்துவத்தின் மற்றும் நற்செய்தியின் முழுமையினுடைய உயர்ந்த மற்றும் உறுதியான வழிகாட்டியாக மரியாள் இருந்தாள்.

**மூலம்:**

**John Paul II, Mary was free from all personal sin, in *L'Osservatore Romano*: Weekly Edition in English, 26 June 1996, p. 11.**

அவரைத் தேடுவதற்கான கடமை அவர்களுக்கு இருந்ததால் அச்செயலுக்காக அவர் அவர்களைக் கண்டிக்கவில்லை.

கவலையோடுகூடிய ஒரு தேடலுக்குப் பிறகு இயேசுவிடம் வந்த மரியாள், அவருடைய செயலைப்பற்றி “ஏன்” என்ற ஒரு கேள்வியை மட்டுமே கேட்கின்றாள்: ‘மகனே, ஏன் இப்படிச் செய்தாய்?’ (லூக் 2,48). இந்தக் கேள்விக்கு எந்தவொரு கண்டனத்திலிருந்தும் விலகி மற்றும் தெய்வீக மகன் என்பதனுடைய மறைபொருளைச் சுட்டிக்காட்டி “ஏன்” என்ற மற்றொரு எதிர் கேள்வியைதான் கேட்கிறாரே அன்றி கண்டனம் செய்யவில்லை.

கானாவூர் திருமண நிகழ்வில் அவர் பேசிய, ‘அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே’ (யோவா 2,4) அவருடைய வார்த்தைகளும் கண்டனத்திற்குரியவைகளாக விளக்கமளிக்கப்பட முடியாது. திராட்சை இரசம் தீர்ந்ததனால் மணமகனுக்கும் மணமகளுக்கும் ஏற்பட்ட சிரமத்தைக் கண்டு மரியாள் எளிய உள்ளத்தோடும் அந்தப் பிரச்சனையை அவரிடம் ஒப்படைத்தும் இயேசுவிடம் பேசுகின்றாள். ஒரு மீட்பர் என்கின்ற வகையில் தனது தந்தையின் விருப்பத்திற்கு மட்டுமே கீழ்ப்படிய வேண்டும் என்பது அறிந்திருந்தும், அவருடைய தாயினுடைய உள்ளார்ந்த வேண்டுதலை அவர் நிறைவேற்றுகின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக, கன்னி மரியாளுடைய நம்பிக்கையை அவர் நிறைவேற்றுகின்றார் மற்றும் இவ்வகையில் அவருடைய மகிமையை வெளிப்படுத்தும்விதமாக தன்னுடைய முதல் அற்புதத்தைச் செய்கின்றார்.

4. பின்பு, மரியாளும் அவருடைய உறவினர்களும் இயேசுவினுடைய பொதுவாழ்வின் தொடக்கத்தில் சொன்ன வார்த்தைகளுக்கு சிலர் எதிர்மறை விளக்கங்களைக் கொடுத்தனர். அவரிடம், ‘உம் தாயும் சகோதரர்களும் உம்மைப் பார்க்க விரும்பி வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்’ என்று ஒருவர் சொன்னபோது இயேசுவினுடைய பதிலைத் தொடர்புபடுத்தி, தூய லூக்கா நற்செய்தியாளர் நமக்கு அதற்கான விளக்கத்தை அறிந்துகொள்வதற்கானத் திறவுகோலைத் தருகின்றார்: இது அவருடய சகோதரர்களைக் குறிக்கும் ஒரு தொடர் என்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, அதை மரியாளுடைய உள் மன உணர்வுகளை அடிப்படையாக வைத்து நாம் புரிந்துகொள்ள வேண்டும் (cf. யோவா 7,5). ‘இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்’ (லூக் 8,21) என்று இயேசு பதிலளித்தார்.

இயேசுவினுடைய பிறப்பு அறிவிப்பில் லூக்கா நற்செய்தியாளர் மரியாள் எவ்வாறு உண்மையில் கடவுளுடைய வார்த்தையைக் கேட்பதிலும் தாராள மனதிலும் முன்மாதிரியாக இருந்தார் என்பதைக் காட்டுகின்றார். இத்தகைய விளக்கமளிக்கையில், அவ்வத்தியாயமானது தன்னுடைய சொந்த வாழ்வில் கடவுளுடைய திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிய மரியாளுக்கு ஒரு மிகப்பெரும் புகழ்ச்சியைத் தருகின்றது. இயேசுவினுடைய வார்த்தையானது சகோதரர்களைக் குறிப்பதற்கு







அனைத்தையும் தன் சிந்தையிலிருத்தித் தியானித்தவள். விசுவசித்ததால் பேறுபெற்றவள். இதே விசுவாசத்தை பிறருக்கும் பகிர்ந்து கொடுப்பதன் மூலம் நற்செய்திப் பணியாளராகின்றாள் (அவர் சொல்வதைச் செய்யுங்கள்). இவளது அழகின் இருதுருவங்கள் இவைகளே. தூய ஆவியானவர் இவளை அழகால் அணிசெய்கிறார்.

சிலுவையடியிலே தாய்மைப்பணியைப் பூர்த்தி செய்துவிட்டு அதற்கு அடுத்த படியான பெரிய குடும்பத்திலே, விசுவாசக் குடும்பத்திலே, குழுவிலே துணிவாக இறங்குகிறாள். தன் மகனின் சீடர்களோடு இணைந்து புதிய சமூகம் படைக்க, பதிய குடும்பம் அமைக்கக் கிளம்புகின்றாள். அதுமுதல் அந்தச்சீடர் அவளைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டார். அவளது விசுவாசம் இன்று நம் அனைவருக்கும் முன்னோடி. அவளது பயணம் நம் அனைவருக்கும் பாதையமைத்த தெளிவு.

இறைவன் தான் படைத்த அனைத்தையும் நல்லது எனக் கண்டார் (தொநூ. 1:31). அழகு என்பது இறைவார்த்தையோடு இணைந்துபோகும் நிலை. இறைவார்த்தையின்படி வாழ்தல் என்கின்றபோது, தன்னிலிருந்து விடுபட்டு, வெளிவந்து, இறைவனுடன் உறவில் உடன்படிக்கையில் வாழ்வதும், படைப்புக்களனைத்தோடும் பரிவுடன் வாழ்வதும் ஆகும். கொடையில், பணியில், பகிர்வில், பிரசன்னத்தில்தான் இந்த வாழ்க்கை அடங்கியிருக்கின்றது.

அழகு தூய தமத்திருத்துவத்திலே தொடங்குகின்றது (ஒரே ஞானம், ஒரே வல்லமை, ஒரே சித்தம், ஒரே தெய்வீகம்...).

*அகிலம் அழகு*, (ஒழுங்கு order ) ஏவாள் அழகு (விசுவாசம் fidelity), இஸ்ராயேல் அழகு (இறைவனின் கட்டளைகளை வாழ்ந்ததால்) (இச. 6:4-5, மத் 22:34-40, லூக் 10:25-28).

*மரியாள் அழகு* - ஆகட்டும். குறைகளின்றி இறைவார்த்தையைக் கேட்டு வாழ்ந்தாள், இயேசுவை வழிநடத்தினாள், இயேசுவின் வழி நடந்தாள், இதனால் திருஅவையும் தன்னைப்போல நடத்திச்செல்லும் பேறு பெற்றாள்.

*இயேசு அழகியவர்*. இறைத்திட்டத்தை நிறைவேற்றியவர். (யோவா 4:34, 8:29). *திருஅவை அழகு* இதயத்தில் இறைவார்த்தையைப் பாதுகாத்து பரப்புகின்றாள். பரிசுத்த வாழ்க்கை வாழவிழைகின்றாள் (அன்பிலே இணைந்தது திருஅவை).

இயேசுவைப்போன்ற மதிப்பீடு கொண்டவர்கள் அழகியவர்கள் (புனிதர்கள்). இன்று நமக்கு, மரியாள் உணர்த்துவது என்ன? இறைவனின் திருவுளம் அறிந்து, புரிந்து, ஏற்றுக்கொண்டு, அதனை வாழ்வதற்கு விழையும்போது நாமும் அழகியவர்களே. அன்னையிடம் நாம் ஜெபிப்போம்,

“மரியே, மனுக்குலத்தின் தாயே, உம்மோடு சேர்ந்து ‘ஆகட்டும்’ என்ற அழகிய பதிலையே இறைவனுக்குக் கொடுக்க எங்களுக்குக் கற்றுத் தாரும்”. ஆமென்.



# அன்னையின் திருத்தலங்களை நோக்கி... 1

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச.,, திருச்சி.

**'அன்னையின் பெயரைச் சொன்னால் ஆறுதல் கிடைத்திடுமே அகிலத்தை ஆள்பவனின் அன்னை என்பதாலே'**

ஆதவனாய் உதித்து என்றும் மறையாத இளம் கதிரவனாய் இருக்கும் ஆண்டவர் இயேசுவை தன் உதரத்தில் தாங்கிய அன்னை மரியாள், தன் மகனாலேயே நம் அனைவருக்கும் அன்னையாய் வழங்கப்பட்டவர். எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று சொன்ன ஆண்டவர் தன்னுடைய மகிமை மிகுந்த பிரசன்னத்தின் வடிவாய் நற்கருணையோடு அன்னை மரியின் உடனிருப்பையும் வழங்கிச் சென்றிருக்கின்றார். தன் திருமகனிடம் பரிந்து பேசும் அன்னை மரியாள், மானுட வரலாற்றில் தனது பிரசன்னம் எங்கும் எப்போதும் இருக்கிறது என்பதைத் தனது காட்சிகள் வாயிலாக வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். அத்தகையக் காட்சிகளுள் ஒன்றான குவாதலூப்பே காட்சி ஒரு கண்டத்தின் விசுவாச வாழ்வின் எழுச்சிக்கு காரணமாக இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஐந்து நூற்றாண்டுகளாய் தனது அழகியத் திருஉருவால் அனைவரின் உள்ளத்தையும் தனது திருமகனை நோக்கி எழுப்பிக் கொண்டே இருக்கிறார் மரியா. கி.பி. 1492 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் தேதி மனித குல வரலாற்றில் ஒரு புதிய நாளாய் அமைந்தது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டோபர் கொலம்பஸ் ஸ்பெயின் அரசனின் சார்பாக இந்தியாவிற்கான புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்க புறப்பட்டவர் அமெரிக்க கண்டத்தை வந்தடைந்தார். தான் வந்தடைந்த தீவிற்கு சன் சல்வடோர் என்று பெயரிட்டார். ஏற்கனவே மக்கள் அங்கு வாழ்ந்து வந்தனர். ஆனால், உலகின் ஏனைய நாடுகளைப் பற்றி அவர்களும் அறிந்திருக்கவில்லை; ஏனைய நாடுகளும் இம்மக்களை அறிந்திருக்கவில்லை. இங்கே இரு உலகங்களின் சந்திப்பு நிகழ்ந்தது என்று கூறலாம். பூர்வீக குடிகள் வாழ்ந்த இடத்திற்கு வந்த புதிய மனிதர்கள் தங்களோடு தங்கள் கலாச்சாரத்தையும், விசுவாசத்தையும் கொண்டுசேர்த்தனர். இங்ஙனம் கிறிஸ்தவ மதம் அமெரிக்க கண்டத்தில் வேரூன்ற ஆரம்பித்தது.

ஒருசில வராலாற்று குறிப்புகளின் படி கி.பி. 1508 ஆம் ஆண்டில் அமெரிக்க கண்டத்தின் முதல் துறவற இல்லம் கட்டப்பட்டது. மேலும் அங்கு முதல் திருப்பலியும் கொண்டாடப்பட்டது. இங்ஙனம் கத்தோலிக்க கிறிஸ்தவ விசுவாசம் படிப்படியாக வேரூன்ற ஆரம்பித்தது. அன்னை மரியாவின் மீதான பக்தியும் வளரலாயிற்று. தென் அமெரிக்க நாடுகளில் பிரேசிலைத் தவிர ஏனைய நாடுகள் அனைத்தும் ஸ்பெயின் நாட்டால் காலனியாக மாற்றப்பட்டவை. எனவே, இலத்தீன் அமெரிக்க நாடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அன்னை மரியின்





பெற்றிருந்தாலன்றி அவருடைய வாழ்வு முழுவதும், அது மன்னிக்கத்தக்க பாவமாக இருந்தாலன்றி, எல்லா பாவத்தையும் தவிர்க்க முடியாது'' என்ற கருத்தை வலியுறுத்தி அதையே தன்னுடைய நிலைப்பாடாக வெளிப்படுத்துகின்றது (*DS*, 1573). கடவுளின் அருளினால் உருமாற்றப்பட்டு புதிப்பிக்கப்பட்ட கிறித்தவன்கூட பாவம் செய்வதற்கான சந்தர்ப்பச் சூழல்களிலிருந்து தப்பித்ததில்லை. திரிதெந்தென் திருச்சங்கம் கூறுகின்றவாறு, பாவத்திலிருந்து தடுக்கக்கூடிய அந்த சிறப்புப் பண்பு உறுதியளித்தாலன்றி கடவுளுடைய அருளானது ஒருவருடைய வாழ்வு முழுவதும் அவருடைய எல்லா பாவங்களிலிருந்தும் அவரைப் பாதுகாக்காது. மரியாளைப்பொறுத்தவரை இதுதான் நிகழ்ந்தது.

திரிதெந்தென் திருச்சங்கமானது இந்த சிறப்புச் சலுகையை வரையறுக்க விரும்பவில்லை, ஆனால் திருஅவையானது தெளிவாக உறுதிப்படுத்துவதாகக் கூறுகிறது. இதற்கு "*Tenet*" என்ற லத்தீன் வார்த்தையைச் திருச்சங்கம் பயன்படுத்துகிறது. அதாவது திருச்சங்கம் உறுதியாக இதை நம்புகிறது என்பதே இதன் பொருளாகும். இந்த உண்மையை வெறுமனே ஒரு பக்தி சார்ந்த நம்பிக்கை அல்லது கருத்து என்று புறக்கணிப்பதைத் தாண்டி, அதனுடைய தன்மையை கடவுளுடைய மக்களின் நம்பிக்கையில் பொதிந்திருக்கின்ற ஒரு உறுதியான கோட்பாடாக உறுதிப்படுத்துகின்றது. மேலும், இந்த நிலைப்பாடானது, இயேசுவினுடைய பிறப்பில் வானதூதரால் மரியாளுக்கு வழங்கப்பட்ட அருளை அடிப்படையாகக்கொண்ட ஒன்றாகும். "அருள் நிறைந்தவளே" (*kecharitoméne*) என்று மரியாளை அழைப்பதன் வழியாக வானதூதர் அவளை என்றைக்குமானதொரு நிறைவினாலும் புதிதத்துவத்தின் முழுமையினாலும் நிரப்பப்பட்ட, பாவத்தினுடைய நிழலோ, ஒழுக்க அல்லது ஆன்மீக குறைபாடோ இல்லாதவொருப் பெண்ணாக அங்கீகரிக்கின்றார்.

3. மரியாளுடைய முழுமையான புனிதத்துவம்பற்றி அவ்வளவாக திருப்தியில்லாத அநேக ஆரம்பகால திருஅவைத் தந்தையர்கள் முழுமையற்றத் தன்மையையும் ஒருக்கக் குறைபாடுகளையும் அவளுக்குக் கற்பித்தார்கள். இதே நிலைப்பாட்டை ஒருசில அண்மைகாலத்து ஆசிரியர்களும் கொண்டிருந்தனர். இருப்பினும், மீட்பரின் தாய்க்கு ஒரு பாவத்தையோ அல்லது ஒழுக்கக் குறையையோச் சுட்டிக்காட்டுவதற்கு அவர்கள் மேற்கோள்காட்டிய விவிலிய வாசகங்கள் இந்தக் கருத்துக்களை நியாயப்படுத்துவதற்கான எந்தவொரு அடிப்படை ஆதாரத்தையும் கொடுக்கவில்லை.

பன்னிரெண்டு வயதில் அவருடைய தாய்க்கான இயேசுவின் பதில்: 'நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?' (லூக் 2,49), என்ற இயேசுவினுடைய கேள்வியானது சில வேளைகளில் மறைமுகமானதொரு கண்டனமாகவே விளக்கப்பட்டது. இருப்பினும், இந்த நிகழ்வுபற்றிய கவனமானதொரு வாசிப்பானது, இயேசுவினுடைய தாயும் அவருடையத் தந்தையான யோசேப்பும்

திருத்தந்தையின் தேவதாய்ச் சிந்தனைகள்

## மரியாள் எல்லா விதமான தனிப்பட்ட பாவங்களிலிருந்தும் விலக்கிவைக்கப்பட்டிருந்தார்

புனிதத்துவத்தில் மரியாளைப் பாதுகாப்பதற்காக அவளுடைய இளம்வயதில் அவளுக்கு வழங்கப்பட்ட சிறப்புச் சலுகையானது நம்பிக்கை மற்றும் அன்பு போன்றவற்றில் அவளுடைய மிகப்பெரும் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

1. அமல உற்பவக் கோட்பாட்டு வரையறையானது "ஆதிப்பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதிலிருந்து" மரியாளுடைய தொடக்க காலம் பற்றி மட்டுமே நேரடியான அக்கறையோடு அனுகுகின்றது. இவ்வாறு, திருத்தந்தையினுடைய ஆசிரியமானது பல நூற்றாண்டுகளாக பிரச்சனைக்குள்ளாகியிருந்த ஆதிப்பாவத்திலிருந்து மரியாள் பாதுகக்கப்பட்டது பற்றிய உண்மையை மட்டுமே வரையறுக்க விரும்பியதேயன்றி ஆண்டவருடைய கன்னித்தாயின் என்றைக்குமான புனிதத்துவம் பற்றி வரையறுப்பதில் அக்கறைகொள்ளவில்லை.

இந்த உண்மையானது கிறிஸ்தவ மக்கள் மத்தியில் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாக இருந்தது. இது மரியாள் ஆதிப் பாவங்களிலிருந்து விலக்கிவைக்கப்பட்டவளாக மட்டுமல்லாமல் அவள் மற்ற சூழ்நிலைச் சார்ந்த பாவத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்டாள் மற்றும் இந்த ஆரம்ப கால புனிதத்துவமானது அவளுடைய வாழ்வு முழுவதையுமே புனிதத்துவத்தால் நிரப்புவதற்காக அவளுக்குக் கொடுக்கப்பட்டது என்பதற்குச் சான்றுபகர்கின்றது.

**மரியாளிடம் பாவமோ அல்லது மற்ற குறைபாடோ இருந்ததாகக் கருத முடியாது**

2. திருஅவையானது மரியாளை புனிதை என்றும் பாவத்திலிருந்தும் ஒழுக்கக் குறைபாட்டிலிருந்தும் விடுவிக்கப்பட்டவள் என்றும் தொடர்ந்து கருதிவந்துள்ளது. இந்த ஆழமான நம்பிக்கையை **திரிதெந்தென் திருச்சங்கமானது** "திருஅவையானது கன்னி மரியாள்மீது வைத்திருக்கின்ற நிலைப்பாட்டில், அவர் இறைவனிடமிருந்து சிறப்பானதொரு சலுகையைப்



அருள்பணி. அமல்
ம.ஊ.ச.
உரோமை





பக்தி மிக அதிகமாகப் பரவியுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் புகழ்பெற்ற அன்னையின் திருத்தலங்கள் உள்ளன. அவற்றின் உலக அளவில் அதிகம் அறியப்பட்ட இரண்டு திருத்தலங்களையும் அதற்கு காரணமான அன்னையின் காட்சிகளைப் பற்றியும் வரும் தொடர்களில் நாம் விரிவாகக் காண இருக்கிறோம். இது ஒரு திருப்பயணம். அன்னையின் திருத்தலங்களை நோக்கித் திருப்பயணம் மேற்கொள்வது நமது வழக்கமாக உள்ளது. அத்தகையத் திருப்பயணங்களில் இதுவும் ஒன்றாக அமையும் என நம்புகிறேன்.

மெக்ஸிக்கோ நாட்டின் குவாதலுப்பே அன்னையின் காட்சி, பிரேசில் நாட்டின் அபரிசிதா அன்னையின் காட்சிகளைப் பற்றியும் காண இருக்கிறோம். இந்த இரண்டு காட்சிகளில் முதன்மையானதான குவாதலுப்பே காட்சிகளைப் பற்றி முதலில் காண்போம்.

அமெரிக்க கண்டத்தில் கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்த காலத்தில் ஸ்பெயின் இலத்தீன் அமெரிக்க நாடுகளைத் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வர ஆரம்பித்தது. மெக்ஸிக்கோ நாட்டை கி.பி. 1519-21 கால கட்டத்தில் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. தனது ஆளுகைக்குட்பட்ட மெக்ஸிக்கோ நாட்டில் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்ப யாசக சபையினரை ஸ்பெயின் பேரரசர் வேண்டினார். அதற்கிணங்க பிரான்சிஸ்கன் துறவிகள் 1524லும், தோமினிகன் சபையினர் 1526லும், அகுஸ்தீனியன் சபையினர் 1533லும் சென்றனர்.

மெக்ஸிக்கோ நகரின் மறைபரப்பாளர்களாக இருந்த பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த சுமாராகா பேராயராக (archbishop Zumárraga), இருந்த காலத்தில் அன்னை மரியாவின் காட்சி ஒரு சாதாரண பழங்குடி மனிதருக்கு அருளப்பட்டது. மெக்ஸிக்கோ நாட்டின் பேரரசாக விளங்கிய அஸ்டேக் பேரரசு வீழ்ந்தது கி.பி 1521 ஆம் ஆண்டு. அப்பொழுதுதான் அதிக எண்ணிக்கையிலானவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக் கொண்டனர். திருஅவைக் குழந்தையாக இருந்த காலம்; கிறிஸ்தவர்கள் இறைமகன் இயேசுவின் மீதான விசுவாசத்தில் படிப்படியாக வளர்ந்து கொண்டிருந்த நேரம். குழந்தைக்குத் தாயைத் தவிர வேறு யார் விசுவாசத்தை ஊற்றி வளர்க்க முடியும்.

நம் நாட்டில் பொதுவாக 10வயது ஆகும் போது நம் பிள்ளைகளுக்கு முதல் நற்கருணை வழங்குவது வழக்கம். 10 வயதான மெக்ஸிக்கோ திருஅவைக்கு விசுவாசத் திருப்பயணத்தில் அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்ல கி.பி. 1531 ஆம் ஆண்டு அன்னை மரியாள் தன்னையே திருக்காட்சி வழியாக வெளிப்படுத்தினார். இந்த அற்புதமான ஆன்மீக அனுபவத்தைப் பெற அவர் தேர்ந்தெடுத்தவர் குவான் தியேகோ (Juan Diego) என்ற எளிய மனிதர். விசுவாசத்தில் குழந்தையாய் இருந்த அவரிடம் தாய் மரியாள் சொன்ன வார்த்தை, " உன் அன்னையாகிய நான், உனக்காக இங்கில்லையா?" என்பதாகும்.

நம் அன்னை நமக்காக இருக்கிறார். நமக்காக இருக்கிற அன்னை நமக்காக ஈன்றெடுத்த 'இம்மானுவேலின்' பிறப்பைக் கொண்டாடும் இக்காலத்தில் அன்னையின் பரிந்துரை வழியாக ஆண்டவரின் ஆசியைப் பெறுவோம். தொடர்ந்து அன்னையை திருத்தலத்தை நோக்கி பயணிப்போம்.

**திருப்பயணம் தொடரும்....**



# தூய ஆவியாரின் ஏவல் அன்னை மரியாள்

அருள்பணி. முனைவர். ஆ. அந்துவான் அகிலன் சேவியர், என்னூர், சென்னை.

1. அனைவருக்கும் கிறிஸ்துப் பிறப்பின் வாழ்த்துக்களும் வணக்கங்களும்.
2. மகிழ்ச்சின் நாட்களிலே நாம் இருக்கின்றோம். மனதில் உள்ள காயங்களை ஆற்றி, உறவுகளிலே தென்படும் விரிசல்களை நீக்கி, அவற்றை சரிசெய்து, உள்ளார்ந்த அன்போடு பிறர் அன்பில் வாழ இந்த கிறிஸ்து பிறப்பு காலம் நம்மை இருகரம் நீட்டி அழைக்கின்றது.
3. கிறிஸ்து பிறப்பு மகிழ்வில் உள்ள நமக்கு அன்னை மரியாளின் இந்த சாயல் மிகவும் தேவைப்படுகின்றது. எந்த சாயல் எனில் தூய ஆவியாரின் ஒளிபெற்று இறைவழியில் நடப்பது.
4. இந்த மகிழ்வின் காலத்திலே அன்னை மரியாள் தரும் முத்தான மூன்று செய்திகளை சிந்திப்பதோடு நின்றுவிடாமல் அதனை செயல்படுத்தவும் அழைக்கின்றோம். என்ன அந்த மூன்று?
   - a) உதவுவதில் துரிதம் (லூக் 1:39)
   - b) வாழ்த்துதல் (லூக் 1:40)
   - c) மகிழ்ச்சியைப் பகிர்தல் (லூக் 1:44)

## a) <u>துரிதமாக உதவுதல்</u>

தூய ஆவியின் வல்லமையைப் பெற்ற கன்னிப்பெண் மரியாள், மமதையோ, கர்வமோ, இறுமாப்போ, அகங்காரமோ இல்லாமல் மகிழ்ச்சியின் செய்தியைப் பெற்றவுடனே "விரைந்துச் சென்றாள்" (லூக் 1:39). ஏறத்தாழ 100 கி.மீ-ருக்கும் மேல் இருக்கும் அயின் கரீம் ("Ein Kerem") என்னும் ஊருக்கு விரைந்து செல்கின்றார். ஏறத்தாழ 4 நாட்கள் பயணம் செய்ய வேண்டிய தூரம் அது. தனியாகத் தூய ஆவியானவரோடு பயணித்து துணிவோடு நகரங்களையும், ஊர்களையும், பாலைவனங்களையும் கடக்கின்றாள் அந்தக் கன்னிப்பெண்.

தூய ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுள்ள நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய முதல் பணி உதவுதல், அதிலும் விரைந்துச் சென்று உதவுதல்.

உதவிசெய்வதில் காலம் தாழ்த்தாத அன்னை நம் முன்னோடியாகத் திகழ்கின்றாள். பல வேலைகளில் நாம் உதவிசெய்பவர்களில் பலர் நம்மை ஏய்த்துவிடலாம், உதாசினப்படுத்தலாம், ஆனால் இவையனைத்தையும் தாண்டி உதவியை விரைந்து செய்வதே அன்னை நமக்கு சொல்லித்தரும் முதல் செய்தி. நாம் ஒருசிலரிடம் உதவி என்று தேடும்போது, உதவி உடனே





12) குருவின் மகள் வேசியானால், அவள் தன் தந்தைக்குத் தூய்மைக்கேட்டை ஏற்படுத்துகிறாள். அவளை என்ன செய்ய வேண்டும்?
13) எது நிலத்துக்கு ஓய்வு ஆண்டு?
14) ------------- ---------------- நீங்கள் உண்ணலாகாது. இது உங்கள் உறைவிடம் எங்கும் தலைமுறைதோறும் உங்களுக்கு மாறாத நியமமாக விளங்கும்.
15) நல்லுறவுப் பலிகளில் எதை குருவிடம் பங்காகக் கொடுக்க வேண்டும்?
16) குற்றப்பழி நீக்கும் கிடாய்க்குட்டியையும், ஆழாக்கு எண்ணெயையும் குரு வாங்கி என்ன செய்வார்?
17) இஸ்ரயேல் மக்களிடையே நான் தூயவராகக் கருதப்படுமாறு, என் திருப்பெயரை இழிவுப் படுத்தாதிருங்கள். நானே உங்களைப் புனிதர் ஆக்கும் ஆண்டவர்! இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?
18) பண்டிகையின் முதல் நாள் சபை கூடும் ----------- ------------. அன்று வேலை செய்யலாகாது.
19) பாவக்கழுவாய் பலியாக அவர் ஓர் ஆட்டுக் குட்டியைக் கொண்டு வந்தால் அது எப்படி இருக்க வேண்டும்?
20) நன் நியமங்களையும் ஆணைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றிற்கேற்பச் செயல்படுவோர் அவற்றால் வாழ்வு பெறுவார். நானே ஆண்டவர்! இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

## சென்ற மாதத்தின் விடைகள்: விடுதலைப்பயணம் 21-40

**1.** 40:17; **2.** 39:30; **3.** 22:21; **4.** 21:12; **5.** 29:45; **6.** 30:6; **7.** 37:9; **8.** 38:16; **9.** 24:16; **10.** 24:8; **11.** 32:9; **12.** 33:7; **13.** 26:24; **14.** 31:1-2; **15.** 25:2; **16.** 36:8; **17.** 27:13; **18.** 35:21 **19.** 28:15; **20.** 34:6.

அன்பார்ந்தவர்களே! தயவுசெய்து உங்கள் விடைத்தாள்களோடு முழு முகவரியையும் முடிந்தால் உங்களது அலைபேசியையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-01-2019

முகவரி

விவிலிய வினாடி வினா போட்டி
பதிப்பாசிரியர் "அப்படியே ஆகட்டும்"
ஜோதி மாதா ஆலயம்
5/301, மாதா கோயில் தெரு,
ஒக்கியம்பேட்டை, சென்னை - 97



# விவிலிய வினா விடை

**சனவரி 2019**

## லேவியர்

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

1) நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறவேண்டியது: ஒருவர் யாரையேனும் பொருத்தனையாகச் செலுத்தத் திட்டமிட்டிருந்தால் அவர்கள் உன் மதிப்பின்படி யாருக்கு உரியவர்?

2) நீரும் உம்மோடு உம் புதல்வரும் சாகாதிருக்க வேண்டுமெனில், நீங்கள் சந்திப்புக் கூடாரத்திற்குள் நுழையும்போது திராட்சை இரசத்தையோ மதுவையோ குடிக்க வேண்டாம். இது யார் யாரிடம் கூறியது?

3) எரிபலிக்கான அவரது நேர்ச்சை ஆட்டுமந்தையிலுள்ள செம்மறி அல்லது வெள்ளாடாக இருந்தால், அவர் ----------- ஓர் ஆட்டுக் கிடாயைக் கொண்டு வரவேண்டும்

4) எத்தகைய தூய்மைக்கேட்டினாலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதரை ஒருவர் அறியாமலே தொட்டு, பின்பு அதை அறிந்துகொண்டாலும் அவரும் குற்றவாளியே. இது எந்த அதிகாம்? எந்த வசனம்?

5) நீங்கள் இஸ்ரயேல் மக்களிடம் கூறவேண்டியது: உலகில் உள்ள உயிரினங்களில் நீங்கள் உண்ணத்தக்கவை கால் நடைகளில் எவைகள்?

6) தூயகத்தில் தொங்குதிரைக்கு உள்ளே இருக்கும் இரக்கத்தின் இருக்கையின் மூடிக்கு முன்பாக, அவன் விரும்பும் போதெல்லாம் வரக்கூடாது: வந்தால் என்ன நேரிடும்?

7) குறிசொல்வோரையும், மைபோடுவோரையும் பின்பற்றி வழிதவறியோரை எதிர்த்து என் முகத்தைத் திருப்பிக்கொண்டு அவர்களை அவர்கள் இனத்தில் இராதபடி அழிப்பேன். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

8) ஓய்வுநாள்களைக் கடைப்பிடித்து, என் ----------------- அஞ்சி வாழ்வீர்களாக! நானே ஆண்டவர்!

9) குரு உணவுப் படையலிலிருந்து நினைவுப்படையலைத் தனித்தெடுத்துப் பலிப்பீடத்தின்மேல் எரிப்பார். இது ஆண்டவர் விரும்பும் என்ன பலி?

10) ஆரோனும் அவன் புதல்வரும் அருள்பொழிவு பெறுகின்ற நாளில் அவனும் அவன் புதல்வரும் ஆண்டவருக்குக் கொண்டுவர வேண்டிய படையல் இதுவே. அது எது?

11) ஒரு மனிதர் தொழுநோயாளி எனில், அவர் யாரிடம் கொண்டு வரப்படுவார்?







**கிடைக்காதா என்று ஏங்குகிறோம். நாம் பிறருக்கு உதவி செய்யும்பொழுதும் அதே துரிதம் இருக்க வேண்டும் என்று சான்று பகர்கின்றது அன்னை மரியாளின் கனிவு. தி.பா 121:1-2 கூறும் செய்தியும் அதுவே. உதவி எங்கிருந்து வரும் என்றால் ஆண்டவரிடமிருந்து, அவரது அழைப்பை உணரும் ஒவ்வொரு உயர்ந்த உள்ளத்திலிருந்து வரும். ஆகவே விரைவோம் - உதவுவோம்.**

**b) <u>வாழ்த்துதல்</u>**

**ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக விழாக்கள், பெருவிழாக்கள், ஆண்டு விழாக்கள், பிறப்பு விழாக்கள் என்றால் வாழ்த்து அட்டைகளை அனுப்பினோம். இப்பொழுது எல்லாம் Whatsapp வாழ்த்துக்செய்தி, குறுஞ்செய்தி, E-message என்றெல்லாம் நிலைமை மாறிவிட்டது. உறவுகளை நாடிச்சென்று வாழ்த்துக் கூறுவதே ஒரு தனி சுவைதான். அவரவர்களுக்கென்று நேரம் ஒதுக்குவது எல்லாம் மாறி இப்பொழுது அருகில் இருப்பவருக்கே வாழ்த்துச் சொல்வது மறந்துப்போனது. இது நவீன காலத்துக் தேடுதல் என்பேன்.**

**அன்னைமரியாள், தூய ஆவியைப்பெற்றவர், துணிவுடன் சென்று, எலிசபெத்தின் இல்லம் அடைந்து வாழ்த்துச் செய்தியை பகிர்கின்றார். பெற்ற தூய ஆவியை பகிர்கின்றார். அவள் வாழ்த்து உண்மையுள்ளதாய் இருந்ததால் எலிசபெத்தும் அதே தூய ஆவியைப்பெற்று அன்னையை வாயார, மனதாரப் புகழ்கின்றார். "என் ஆண்டவரின் தாய்" (லூக் 1:43) என்று கூறுகின்றார்.**

**யார் எலிசபெத்தம்மாளுக்கு மரியாள் ஆண்டவரின் தாய் என்று அறிவுறுத்தியது? அது ஒரு யூகமா? இல்லை உண்மை வாழ்த்து உள்ளுணர்வையும் எழுப்புகின்றது. வாழ்த்து ஆவியின் கொடையாக மாற்றம் காணுகின்றது, அதுவே வெளிப்பாட்டையும் தருகின்றது. இந்த வாழ்த்தின் பகிர்வில் உடன்சேர்ந்து மகிழ்வது ஒட்டு மொத்த குடும்பமே. சாதாரண வாழ்த்து அக்களிப்பாக மாற்றம் பெற்று, ஆவியானவரின் ஏவுதலால் உள்ளிருக்கும் கருக்களும் உறவைப் பாராட்டுகின்றன.**

**வாழ்த்தின் மகத்துவம் இதுதான். திருத்தந்தை பிரான்சிஸ் பல விமர்சனங்களையும் தாண்டி அனைவருக்கும் காலை வணக்கம், மதிய வணக்கம், மாலை, இரவு வணக்கங்கள் சொல்வது பிரதியைப் பெறுவதற்காக அல்ல, மாறாக இயல்பான வார்த்தையில் உறவைப் பகிரவே. நாம் யாருக்கு வாழ்த்தைப் பகிர்கின்றோம்? நம் வாழ்த்து எதிர்பார்த்து அமைகின்றதா? எதார்த்தமானதாக இருக்கின்றதா? உள்ளார்ந்த உணர்வா? அல்லது ஏனோதானோவா? தூய ஆவியாரால் தூண்டப்பெற்ற நாம், அன்னையின் வழியில் பகிர்வோம் வாழ்த்தை - அதுவே பயனளிக்கும் வார்த்தை.**

**c) மகிழ்ச்சியைப் பகிர்தல்**

இறைவனே உதிரத்தில் தோன்றவுள்ளார் என்பதற்கு முன்சான்றுதான் முதியவரின் மகப்பேறு. அன்னைமரியாளுக்கு இரண்டு ஆச்சரியம், இரண்டுமே, கடவுளால் ஆகாதது ஒன்றும் இல்லை என்பதற்குச் சான்று (லூக் 1:37). மகிழ்ச்சியின் செய்தியை அறிந்த அவர் உண்மையை பரிசோதிக்கச் சிரமப்பட்டு 100 கி.மீ பயணம் செய்யவில்லை. மாறாக, முழுமையாக நம்பி, பெற்ற மகிழ்ச்சியை, மகிழ்ச்சியின் செய்தியைப் பகிரவே பயணித்தாள். தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட அனைவருமே மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மரியா | - | லூக் 1:39-45 |
| 2. | எலிசபெத்து | - | லூக் 1:41 |
| 3. | திருமுழுக்கு யோவான் | - | லூக் 1:44 |
| 4. | செக்கரியா | - | லூக் 1:67 |
| 5. | சிமியோன் | - | லூக் 2:27 |

மற்றும் பலர்.....

ஆண்டவரின் உன்னத மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள முயலும் அன்னை மரியாள், பிறரின் மகிழ்ச்சியைத் தட்டி எழுப்புவதற்கும் காரணமாகின்றார். தனது மகிழ்ச்சியை வெற்றியின் பாடலாக மாற்றுகின்றார் நம் அன்னை. திருமூலரைப்போன்று, "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று கூறி மகிழ்ச்சியைப் பகிர்ந்து இரட்டிப்பாக, இரட்டிப்பு இரட்சிப்பாக மாற்றுகின்றார் அன்னைமரியாள்.

இப்பொழுது நடந்துள்ள ஆவியாரின் குறுக்கீட்டால் வரப்போகும் வருத்தங்களையோ, பொல்லாப்புகளையோ, புரணிப்பேச்சுகளையோ சற்றும் சட்டைசெய்யாமல் தன் பணியை ஒரு அடிமையைப்போன்று செய்கின்றார் நம் அன்னை. வரப்போவதைப் பொருட்படுத்தாமல் நிலையான மகிழ்ச்சியை அனைவருக்கும் பகிர மனம் கொள்கின்றார் அன்னை.

பிறரின் முன்னேற்றம் கண்டு, உயர்வு கண்டு, பணிவாழ்வைக் கண்டு பொறாமை கொள்கின்றோமா? அல்லது மகிழ்ச்சியடைகின்றோமா? நம் மகிழ்ச்சியை நாம் யாரோடு பகிர்கின்றோம்? நம்மை சார்ந்தவர்களுக்காகவா? பகிரப்படும் மகிழ்ச்சியை புறக்கணிப்பு செய்கின்றோமா? அல்லது அன்னையைப்போன்று இயல்பாக ஏற்று உள்ளத்தில் வைத்து மகிழ்கின்றோமா?

பகிர்வோம் மகிழ்ச்சியை - பெறுவோம் வளர்ச்சியை.

கிறிஸ்து பிறப்பு காலத்தில் இருக்கும் நமக்கு இந்த மூன்று கருத்துக்களும் முத்தாக அமையட்டும். இம்மானுவேல் இறையியலை அன்னையைப்போன்று பிறருக்கு வழங்கி ஆனந்தமாய் கொண்டாடுவோம். கிறிஸ்து பிறப்பு விழாவையும் இதன் இணைப்பாகவரும் மற்ற விழாக்களையும்.





## அன்பார்ந்த வாசகர்களே!

**அன்பார்ந்த வாசகர்களே!**
**தயவுசெய்து ௨௦௧௯ ஆம் ஆண்டு சந்தா ரூபாய் ௧௦௦ஐ செலுத்தி உங்கள் பிரதியை உறுதி செய்யுங்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**

பதிப்பாசிரியர் "அப்படியே ஆகட்டும்"
ஜோதி மாதா ஆலயம்
5/301, மாதா கோயில் தெரு,
ஒக்கியம்பேட்டை, சென்னை - 97

**மேலும், இந்த இதழில் பின்பக்க மற்றும் உள்பக்க அட்டைகளில் வண்ணங்களில் விளம்பரம் செய்ய விரும்புவோர் கீழ்காணும் அலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்**
**அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.**
**8680860308**

# வாழியவே!

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

1

பெத்லகேம் ஊரினிலே பெருமகனார்
பெருமையாக அவதரிக்க
அதிசய விண்மீனும் ஆகாசத்தை
அருமையாய் அலங்கரிக்க
விண்ணவர் கூட்டமும் கூடிநின்று
விண்அதிர ஆர்ப்பரிக்க
மண்ணக மாந்தருமே புடைசூழ்ந்து
மாடடையை தோத்தரிக்க
மாபரனை மாண்புறவே ஈன்றெடுத்த
மாதவளே! வாழியவே!

2

முழுமதியும் பெற்ற ஞானியர்
சிந்தை அறியும்படி
குறைமதியு மற்ற ஏரோதியர்
நெஞ்சம் எரியும்படி
ஆதாமை ஆண்டவர் எச்சரித்து
முன்னரே உரைத்தப்படி
அடியவர்கள் பலமுறை உச்சரித்து
சொன்னதன் கருத்துப்படி
ஆதவனை அகிலத்துக்கு அருளிய
ஆலயமே! வாழியவே!

3

எட்டாம் நாளது பெருநாளில்
எல்லாருமே சூடிநின்று
இயேசு என்னும் திருப்பெயரை
ஏகனுக்கு சூட்டிநின்று
யூத முறைமை சட்டப்படி
வேதத்தையுமே கருத்தூன்றி
நாற்பது நாட்கள் ஆனப்பின்னர்
கர்த்தரை காணிக்கையாக்கிய
கடமைக் குன்றா கன்னியமாம்
கன்னிமரியே! வாழியவே!

4

தயாளன் இயேசுவுக்கு தகையுள்ள
தாயானது மட்டுமன்றி
பாலூட்டி சீராட்டி தாலாட்டி
நாள்தோறும் அமுதூட்டி
அன்பூட்டி அறிவூட்டி செறிவூட்டி
குணநலன்கள் நிறைவூட்டி
மடிகிடத்தி மகிழ்ச்சியூட்டி மகிழ்ந்ததோடு
மனுமகனின் திருவாயால்
அம்மா என்று அழைக்கப்பெற்ற
அற்புதமே! வாழியவே!





# நம்பினோர் கெடுவதில்லை

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி

**'நம்பினோர் கெடுவதில்லை - இது**
**நான்கு மறைத் தீர்ப்பு'**
இறை நம்பிக்கை நம் தேவைகளை நிறைவு செய்யும் என்பது
பல்வேறு சமயங்களும் உணர்த்தும் உண்மை
'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' - என்பது பழம் பொன்மொழி.

இன்றுதான் 2018 ஆம் ஆண்டு புத்தாண்டாகப்
புலர்ந்தது போல் இருக்கிறது
இவ்வாண்டு முடிந்து போன ஆண்டாக,
விரைவில் ஓடிவிட்ட ஆண்டாகத் தெரிகிறது
இதோ இன்னொரு புத்தாண்டு மலர்ந்திருக்கிறது
புதிய ஆண்டின் பிறப்பு மகிழ்ச்சியைத் தருகிறது
இவ்வாண்டு நல்லது நடக்கும்
நல்லதே நடக்க வேண்டும் என்பது தான்
நம் அனைவரின் நம்பிக்கை.

ஒவ்வொரு கடந்துபோன நொடிகளும்
நமது வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களை
விட்டுச் சென்றுள்ளன – அவை
புத்தாண்டின் புதுவாழ்வுக்கு உறுதுணையாய் இருக்கும்.
துன்பத்திலும், ஏக்கத்திலும், தேவைகளிலும்
வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் ஒரே எதிர்பார்ப்பு
இவ்வாண்டாவது மகிழ்ச்சிதரும் ஆண்டாக
அமைய வேண்டும் என்பதுதான்.

**(நீ.மொழி 23: 17-18) திரு வசனங்கள்---,**
**"வளமுடன் இருக்கும் பாவிகளைப்போல்**
**நீயும் இருக்க வேண்டும் என்று ஏங்காதே**
**ஆண்டவரிடம் எப்போதும் அச்சமுள்ளவனாய் இரு**
**அப்பொழுது உன் வருங்காலம் வளமானதாய் இருக்கும்;**
**உன் நம்பிக்கையும் வீண்போகாது"** எனக் கூறுகிறது.
இவ்வசனங்களின் அறிவுரையை நெஞ்சில் நிறுத்தி
நம் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டு
நம்முடைய எதிர்மறையான மனநிலைகளையும்
வாழ்வினை சிதைக்கக்கூடிய சிந்தனைகளையும்
பழக்க வழக்கங்களையும் மாற்றும்போது மட்டுமே
நம் வாழ்வு நல்வாழ்வாக மாறும்
அமைதி பிறக்கும் - மகிழ்ச்சி பொங்கும்
எதைப்பற்றியும் கவலை வேண்டாம்
'ஆண்டவர் நம்மோடு இருக்கிறார்' ( எரே 30:11) என நம்புவோம்.

**"உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள்**
**எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர் -**
**காலத்தையும், நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான**
**திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல"**
(எரே29:11)
நாம் கேட்பதைவிட அதிகமாக, சிறந்தவையாகக் கொடுக்க
இயேசு நமக்காகக் காத்திருக்கிறார்

இயேசு தாம் வாழ்ந்த காலத்தில்--,
பிறவியிலேயே பார்வையற்றவன், தொழுநோயாளி போன்ற பலர்
இயேசுவால் குணமடைந்த நிகழ்வை நோக்கினால்--,
குணமடைந்தவர்களிடம் இயேசுவின் மீது
அசையா நம்பிக்கை நிறைந்து இருந்ததை
நம்மால் உணர முடிகிறது
**"நீ நலம் பெறமுடியும் என்று நம்புகிறாயா:?" என்றும்**
**"உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது"** என்றும்
குணமடைந்தோரிடம் கூறுகிறார் இயேசு
இறை நம்பிக்கை இல்லை என்றால்
வெற்றி இல்லை, உயர்வு இல்லை, மகிழ்ச்சி இல்லை, அமைதி இல்லை.

கணவன் - மனைவியிடையே
ஒருவர் மற்றவர் மீது கொள்ளும் நம்பிக்கை
பெற்றோர் பிள்ளைகள் மீதும்,
பிள்ளைகள் பெற்றோர் மீதும் கொள்ளும் நம்பிக்கை
குடும்ப ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழி வகுக்கும்.

நேற்று என்பது கனவு
நாளை என்பதோ கற்பனை
இன்று இறை நம்பிக்கையோடு வாழ்ந்தால் - அது
நேற்றையக் கனவை இனிமையாக்கும்
நாளைய தினத்தையும் நம்பிக்கைக்கு உரியதாக்கும்.

**'யானையின் பலம் தும்பிக்கையில்**
**மனிதரின் பலம் நம்பிக்கையில்'**
**"நான் உன்னை விட்டு விலகுவதில்லை**
**உன்னைக் கைவிடுவதுமில்லை – என்**
**நெஞ்சம் உன்னை மறப்பதுமில்லை"**
**என்கிறார் ஆண்டவர் இயேசு**
**என்றும் நம்மோடு இணைந்திருக்கும்**
**ஆண்டவரை நம்புவோம்**
**புதிய ஆண்டினைத் தொடங்குவோம் நம்பிக்கையோடு.**

***அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!!***





**வாழ்வில் தொடக்கமுதல் இறுதிவரை பலப் போராட்டங்களை, எதிர்ப்புகளைச் சந்தித்தவர். இறைவனின் திட்டம் நிறைவேற அனைத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். இன்றும் பல இடங்களில் கிறிஸ்துவுக்காக பலபேர் துன்பப்பட்டு நற்செய்தி அறிவிப்பு பணியைச் செய்கிறார்கள். அன்றாட மனிதர்களும் பல்வேறு அவமானங்களை அனுபவித்துத் தங்கள் வாழ்வை வாழ்கிறார்கள். மனிதநேயம் கொண்டு சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் களைந்து இயேசு கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாக மனிதனாக வாழ்ந்திட அருள் வேண்டி இப்பலியில் கலந்திடுவோம்.**

### முதல் வாசக முன்னுரை

**'உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கின்றேன்' (எரே 1:19).** இன்றைய முதல் வாசகத்தில் எரேமியா தன் அழைப்பைப்பற்றிக் கூறுகிறார். இறைவனின் அழைப்பு எவ்வளவு மேன்மையானது என்றும் தாயின் கருவிலிருந்து நம்மைத் தேர்ந்தெடுத்து வழிநடத்தி, எந்நாளும் நான் உன்னோடு இருக்கிறேன் என்று ஒரு உண்மையான துணிச்சலான இறைவாக்கினராக மாறிட அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

**'இவற்றுள் அன்பே தலைசிறந்தது' (1கொரி 13:13).** இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கிறிஸ்தவ வாழ்வின் இதயமாக இருக்கும் அன்பைப் பற்றி கூறுகிறார். அன்பு தூய்மையானது, அன்பு நிரந்தரமானது மனித வாழ்வின் ஆதாரம் அன்பு என்றும் இறையன்பு பிறரன்பு கொண்டு வாழும்போது நம் வாழ்வு நிறைவடையும் என்றும் கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### மன்றாட்டுகள்

1. அனபே உருவான இறைவா! திருஅவையில் அன்பும் விசுவாசமும் நிறைந்து நீர் விரும்பிய சமத்துவ சமுதாயம் படைத்திட ஆவியின் வரங்களைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அருளின் ஊற்றே இறைவா! இயேசுவின் பணிவாழ்வில் ஆர்வமுடன் துணைநிற்க இளைஞர்கள் உள்ளங்களில் இறைஅழைத்தலை தந்து திருஅவைக்குப் பணிபுரிந்திடும் தாராள உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



3. கருணையின் இறைவா! குடும்ப உறவில் அன்பும், பகிர்வும், விட்டுக்கொடுத்தலும் இருந்து நல்ல விசுவாசத்தில் பிள்ளைகளை வளர்க்கத் தேவையான அருளை எங்கள் அனைவருக்கும் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. நீதியின் இறைவா! நாட்டில் அமைதி சமாதானம் நிலைத்திடவும் வன்முறை தீவிரவாதம் மாறிடவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### முதல் வாசக முன்னுரை



**'கடவுளின் திட்டத்தை உரக்க வாசித்தார்கள்'.** இன்றைய முதல் வாசகத்தில் எஸ்ரா திருச்சட்டத்தை மக்களுக்குப் புரியும்படித் தெளிவாக வாசித்ததைப்பற்றி நமக்கு நெகேமியா இறைவாக்கினர் விளக்குகின்றார். இறைவார்த்தை, திருச்சட்டம் இவைகளை சரியாகப் புரிந்து அறிந்து மக்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டியது நம் கடமையாகும். எனவே இறைச்சட்டத்தை மதித்து வாழவும் புரிந்து வாழவும் அருள்வேண்டி இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

**'நீங்கள் கிறிஸ்துவின் உடல்' (எபி 10:7).** இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடிகளார் உடலும் உறுப்புகளும் எவ்வாறு ஒன்றோடொன்றுத் தொடர்புகொண்டு உயிர் வாழ்கிறதோ அதே போல நாம் அனைவரும் கிறிஸ்துவின் உடல் என்றும் கிறிஸ்துவை மகிமைப்படுத்த நாம் அனைவரும் ஒருஉடல் போல் ஒற்றுமையோடும் அன்போடும் வாழ வேண்டுமென்று கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### மன்றாட்டுகள்

1. அன்பின் இறைவா! எம் தாய் திருஅவை தூய வாழ்வுக்கு சாட்சியாக மாறவும் இறையரசின் மதிப்பீடுகளை இம்மண்ணில் விதைத்திடத் தேவையான அருளை எம் திருஅவைக்கு பொழிந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. உண்மையின் இறைவா! நாட்டில் வாழும் ஏழைகள் அனாதைகள், கைவிடப்பட்டவர்கள், நோயாளிகள் அனைவரும் நல்வாழ்வு அடைந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அருளின் ஊற்றே இறைவா! தீவிரவாதம், கலவரம், பகைமை நீங்கி அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த நல்ல உலகம் அமைந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. மன்னிப்பின் இறைவா! எங்கள் பாவ செயல்கள் தீய எண்ணங்களை அகற்றி உம்மைப்போல பிறரை அன்பு செய்து மன்னித்து வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு 03-02-2019

**(எரே 1:4-5, 17-19; 1கொரி 12:31-13:1-3; லூக் 4:21-30)**

### திருப்பலி முன்னுரை

**'இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை'.** இறைஇயேசுவில் பிரியமானவர்களே! இன்று ஆண்டின் பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு. நம் வாழ்வில் எதுவும் எளிதாக அமைந்துவிடுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை, துன்பங்களை, அவமானங்களை, சோதனைகளைச் சந்தித்துதான் வெற்றி பெற முடியும். இயேசு தன் பணி







# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. செல்வநாயகம் ம.ஊ.ச, ஜீவமாதா இல்லம், தஞ்சாவூர்.

## ஆண்டவரின் திருமுழுக்கு விழா 13-01-2019

**(எசா 40:1-5, 9-11; தீத் 2:11-14, 3:4-7; லூக் 3:15-16,21-22)**

### திருப்பலி முன்னுரை

**'என் அன்பார்ந்த மகன் நீரே! உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'.** இறைஇயேசுவில் பிரியமானவர்களே! இன்று நம் தாய் திரு அவை இயேசு ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. திருமுழுக்கு என்பது பொதுவாக ஜென்ம பாவத்திலிருந்து கழுவப்படுவது ஆகும். பாவம் ஏதும் இல்லாத இயேசுவுக்கு ஏன் திருமுழுக்கு? என்று நம் உள்ளத்தில் எழலாம். இறைமகன் இயேசு உலகின் பாவம் போக்க மனிதனாகப் பிறந்தார். தந்தையிடம் நமக்காக நம் பாவங்களுக்காகத் தன்னையேக் கையளிப்பதன் முன் அடையாளமாக இத்திருமுழுக்கு நிகழ்வு நடைபெற்றது. மனித குலத்தின் மொத்த பாவங்களுக்கும் தானே முன்வந்து தந்தைக்குக் கீழ்ப்படிந்து இச்செயலை ஏற்றுக்கொண்டார். சிலுவைதியாகத்தின் முன் அடையாளமாக இயேசுவின் திருமுழுக்கு விழா அமைந்துள்ளது. இதே நினைவோடு இப்பலியில் கலந்திடுவோம்.

### முதல் வாசக முன்னுரை

**'ஆயனைப்போல் தம் மந்தையை அவர் மேய்ப்பார்' (எசா 40:11).** இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் நம்பிக்கை தரும் வார்த்தைகளைத் தருகிறார். ஆண்டவரின் வருகையினால் ஏற்படும் மாற்றங்களைக் கூறுகிறார். பாவங்கள் மன்னிக்கப்பட்டது, ஆயனைப்போல மந்தையைப் பேணிக் காப்பார், பள்ளத்தாக்குகள் நிரப்பப்பட்டு, நீதி, நேர்மை, சமத்துவம் மலரும் என்று கூறும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிசாய்ப்போம்.



### இரண்டாம் வாசக முன்னுரை

**'புதுபிறப்பு அளிக்கும் நீரினாலும், தூய ஆவியாராலும் கடவுள் நம்மை மீட்பார்'.** இன்றைய இரண்டாம் வாசகம் இயேசுவே மனிதர் அனைவருக்கும் மீட்பர், நம் பாவங்களிலிருந்து நம்மை மீட்டு புதுவாழ்வு வழங்கும் இறைவன் என்றும் நம் செயல்களால் அல்ல, இறைவனின்

இரக்கத்தினால் நாம் விடுதலை பெற்றுள்ளோம் என்றும் விவரிக்கின்றது. நீரினாலும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்பார் என்று கூறும் இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

## மன்றாட்டுகள்

1. அன்பே உருவான இறைவா! இறைமகன் இயேசுவின் திருமுழுக்கு விழாவினைக் கொண்டாடும் திருஅவை தூய வாழ்வு வாழ்ந்து, மக்களை அன்பிலும், ஒற்றுமையுடன் விசுவாசத்திலும் வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. உண்மையின் இறைவா! நாட்டுத் தலைவர்கள் மக்களின் நலன் கருதி தியாக உள்ளத்தோடு பணி செய்து சமுதாயம் வளர்ச்சி பெற உதவிட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. நலம் தரும் இறைவா! திருமுழுக்குப் பெற்ற அனைவரும் தூய வாழ்வு வாழ்ந்து கிறிஸ்துவின் சாட்சிகளாக பாவ வாழ்விலிருந்து விடுபட்டு வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. வழிநடத்தும் இறைவா! எம் நாட்டில் உள்ள இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் அனைவரும் நல்வாழ்வு பெற்று வளமுடனும் அன்புடனும் வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 2 ஆம் ஞாயிறு 20-01-2019
## (எசா 62:1-5; 1கொரி 12:4-11; யோவா 2:1-12)

## திருப்பலி முன்னுரை

**“இதன் வழியாக அவர் தம் மாட்சியை வெளிப்படுத்தினார்”.**

இறைஇயேசுவில் பிரியமானவர்களே, இயேசுவின் வருகையையும் அவர் தரும் மீட்பையும் நாம் சரியாகப் புரிந்துகொள்ள அவரோடு பயணம் செய்ய வேண்டும். முக்கியமாக அவரின் பணி வாழ்வின் நிகழ்வுகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய இறைவார்த்தைகள் குறிப்பாக நற்செய்தி வாசகம், கானாவூர் திருமண நிகழ்வும், தண்ணீர் திராட்சை இரசமாக மாறியப் புதுமையை நமக்குக் கூறுகிறது. இதுவே இயேசுவின் முதல் புதுமையாகும். இதன் வழியாக இயேசு தம் மாட்சியை வெளிப்படுத்தினார் என்று கூறுகின்றது. இயேசுவின் மீட்புப் பயணம் நிறைவானதாக அற்புதமானதாக இருக்கும். நம் காலியான வெறுமையான வாழ்வை நிறைவாக்க துன்பமும் துயரமும் கலந்த வாழ்வை துன்பமும் இனிமையாக மாற்றிட நம் வாழ்வை வளமாக்கிட இறைவன் இயேசுவே நம் வாழ்வுதரும் ஜீவ தண்ணீராக நம் வாழ்வில் கலந்திட அருள் வேண்டி இப்பலியில் பக்தியோடு பங்குகொள்வோம்.



## முதல் வாசக முன்னுரை

**‘ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்’.**

இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் விடுதலை பற்றியச் செய்தியை கூறுகிறார். ஆண்டவரால் நாம் பெறும் விடுதலையைப்பற்றிக் கூறுகிறார். ஆண்டவரின் கையில் அழகிய மணிமுடியாகவும் ஆண்டவர் விரும்பும் மக்களாக இருக்கிறோம் என்று கூறுகிறது. கடவுளின் அளவில்லாத அன்பு நம்மை வழிநடத்துகிறது. இறைவன் நம்மை முழுமையாக ஏற்று அன்பு செய்கிறார் என்ற நம்பிக்கையை தரும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

**‘அருள்கொடைகள் பல வகையுண்டு, தூய ஆவி ஒருவரே’.**

இன்றைய இரண்டாம் வாசகத்தில் தூய ஆவியாரைப் பற்றியும் அவரது கொடைகள் பற்றியும் விளக்கமாக புனித பவுல் கூறுகிறார். தந்தை, மகன், தூய ஆவியாரை நம்பும் நாம் தூய ஆவியாரின் செயல்பாடுகள் மீது அதிக நம்பிக்கை கொண்டு அவர் நமக்கு வழங்கும் கொடைகள் பற்றி புரிந்து அதே தூய ஆவியின் வல்லமையால் நம் வாழ்வை வளமாக்கிட அருள் வேண்டி இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுகள்

1. அன்பின் இறைவா! எம் திரு அவையை ஆசிர்வதியும். உம்முடைய மீட்புப் பணியில், பயணத்தில் நாங்களும் நம்பிக்கையோடு பயணம் செய்து நீர் தரும் மீட்பை முழுமையாக அனுபவிக்க அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. ஆறுதலின் இறைவா! எம் நாட்டு மக்களையும் நாட்டுத் தலைவர்களையும் ஆசிர்வதித்து, வளமையும், அன்பும், ஒற்றுமையும் நிறைந்த நாடாக மாறிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. உண்மையின் இறைவா! விவசாயிகள் தொழிலாளிகள் அனைவரும் நலமோடு வாழ்ந்திடவும் செய்யும் பணியில் வளர்ச்சி பெற்று மகிழ்வோடு வாழ்ந்திடவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஒற்றுமையின் இறைவா! எங்களிடையே ஒற்றுமையும் அனைவரும் இயேசுவின் மக்கள் என்ற மனநிலையும் மனநிறைவும் உம் மக்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 3 ஆம் ஞாயிறு 27-01-2019
## (நெகே 8:2-4, 5-6, 8-10; 1கொரி 12:12-30; லூக் 1:1-4, 14-21)

## திருப்பலி முன்னுரை

**“நீங்கள் கேட்ட மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று”.**

இறைஇயேசுவில் பிரியமானவர்களே! இன்று ஆண்டின் பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு. திருமுழுக்குப் பெற்றவுடன் தூய ஆவி நிறைந்தவராய் இயேசு தம் பணிவாழ்வைத் தொடங்கினார். அவரின் இந்த மீட்புப் பயணம் இன்றும் தொடருகின்றது என்பது உண்மையாகும். இயேசுவின் பணி யாருக்கானது எப்படிப்பட்டது என்ற ஒரு தெளிவை இன்றைய நற்செய்தி உணர்த்துகின்றது. ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோர் விடுதலை, ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு என்ற தெளிந்த உணர்வுடனும் சிந்தனையுடனும் இயேசு இறைத்திட்டம் நிறைவேற்ற புறப்படுகிறார். இவை அனைத்தும் இயேசுவிலே நிறைவுபெறுகிறது. அவரின் மீட்புத் திட்டத்தில் நாமும் பங்குகொள்ள வேண்டும்; நாம் வாழும் சமூகத்தில் இத்தகைய மாற்றங்களை உருவாக்கிட முயற்சி செய்ய வேண்டும் என்ற தெளிந்த சிந்தனையோடு இப்பலியில் கலந்திடுவோம்.